உ

சிவமயம்.

ஏ. எஸ். கோபன்நாயுடு,—கே. அரங்கநாயகி,

தி. முருகேச நாயகர்,—ஜெகன்மோகன-திருப்புகழ்

குப்புசாமி முதலியார், டி-எஸ். பரமேஸ்வர அய்யர்,

இவர்களாலும், இன்னும் அனேக கம்பெனிகளிலும் ஆடிவரும்.

# சத்ய சாவித்திரி.



இஃது

ம-௱-ாஸ்ரீ, வித்வான்

வே. நாராயணசாமிபிள்ளை அவர்களால்

பார்ஸி வர்ணமெட்டுகள் சேர்த்து எழுதி

முடிவு பெற்றது.

இதை

எம். ஏ. கிருஷ்ணசாமிமுதலியார் அவர்களால்

சென்னை சூளை ஸன்ஆப் இண்டியாபிரஸில் 1-முதல் 5 வது

பாறம் வரையில் பதிப்பிக்கப்பட்டது.

6-வது, 7-வது பாறமும் டைட்டல்பேஜியும்

சென்னை:

ஸ்ரீ சுப்ரமணியவிலாசம்பிரெஸில் பதிப்பிக்கப்பட்டது.

1916.

இரண் விலை.] Registered Copy-Right. [அணா 4.

1932

உ

முருகன் துணை.

ஆலந்தூர் ஒரிஜினல் இந்து டிராமாடிக்
கம்பெனியில் நடாத்திவரும்

# பார்ஸி - சாவித்ரி.

## விநாயகர்-துதி.

(ஜெய ஜெய ஹே விபு)

ஹர ஹர வாமன கருணா நிதியே
அங்குஸ பாஸா அன்பரின் பதியே (ஹர)

வா வா தேவா வாமன ரூபா
ஜீவாதாரா ஓம்ப்ர தாபா
காவா யெனை சுப்ர தீபா (ஹர)

ஈசா நேசா இரக்ஷிப்பாய் தீரா
பாசாங் குஸதரா பாலனு தாரா
தாசானு தாச கெம் பீரா (ஹர)

ஆரு தாரா அமலா வரதா
நாராயண சாமி பூஜிதா
தாரா யருள் சிவ சுதா (ஹர)

---

## சரஸ்வதி-துதி.

தரு.

(காராதோபெதாரா)

வாணி காத்தருள்வாய்
வரம்தா கல் யாணி
சரஸ்வதி வேணி
தரணிபு ராணி-நமோ (வா)

பாணியே வாக்கருள்
பாரதி தாயே
சாரதாம்பா காரும்நீயே

சதாகலை வாசி
பதாம்புஜ நேசி
நிதானப்ர காசி-நமோ (வா)

நாராயணசாமி
நாவிலுறை தேவி
ஆருவமுதேசஞ் சீவி
அம்பர் கலை ஞானி
உம்பர்வெள்ளைமேனி
நம்பினேனே மானி-நமோ (வா)

---

## 1-வது சீன். சாலவபுரி தர்பார்.

### துயுமத்சேனராஜன் - தரு.

(ஜெயது ஈஸ்வரா)

நமசிவாயனே ஓம் (ந)
அமரர் தவமே
அடியேன் துதிக்கும் பரமசிவமே
அகிலமதிலென் வினை தீர் பவமே ஓம் (ந)

கவிஞனாராயண சாமி தேவா
புவனதேசிகா ரக்ஷிக்க நீவா
தவமுனிவரின் மகானு பாவா
ஓம் ஹரோ ஹரா ஓம் (ந)

### டான்ஸ் - தரு.

(சலோ சலோ ஆவோ)

நரபதி சூரா நளின உதாரா
தரணிக் கரசே சதுர்மறை தீரா
சரஸ குபேரா ஜகசுகு மாரா
பரிவாய் சுபகரா வா வா வா
பரிபூரணமுடன் பதியினில் வாழி
பார் பார் பாரும் பணிந்தனம் வாழி (நர)

[நடனமாடியபின் செல்கிறார்கள்.]

துயுமத்சேனன்:—மந்திரி என்ன விசேடம் நம் நகரில் ரணபேரிகை சத்தங் கேட்கிறதே என்னகாரணம்.

மந்திரி:—மகாராஜா! கடகேதுராஜன் திடீரென்று நம் கோட்டையைச் சுற்றி சேனைகள் ப்ரவாகம்போல் சூழ்ந்து முற்றுகை போட்டிருக்கின்றான்.

துயுமத்சேனன்:—ஆ! அப்படியா நம் சேனைத்தலைவரை வரவழைசீக்கிரம்.

[சேனைத்தலைவர் வருகிறார்]

சேனைத்தலைவர் தரு.

(இஷ்கல்மே பேகல்மே)

கோவேயந்த கடகேது நமது
கோட்டையை முற்றுகைபோட்டனனே
தாட்டீகமாய்வூரை வளைத்து அவன்
தாண்டிடுவான் மதில் துளைத்து

துயுமத்சேனன் தரு.

ஆண்டவா காத்திடு
வேண்டினேன் பார்த்திடு
காண்டீபனை மைந்தன்
காணேனே என்செய்வேன்

சேனைத்தலைவர் தரு.

கலங்கவேண்டாம் ஓர் கை பார்க்கின்றேன் இனி
நலம்பெற வும்குறை தீர்க்கின்றேன் (கோ)

துயுமத்சேனன்:—சேனைத்தலைவரே! நான்என்னசெய்யப்போறேன்! தற்சமயம் என் மைந்தனிருந்தானேயாகில் உமக்குப் படை துணையாக அனுப்புவேனே, அவனுமிங்கில்லையே அப்பா! என் மனங் கலங்குகிறதே, ஆவி தத்தளிக்கிறதே, அந்தக் கடகேது கொடியனாயிற்றே! என்னை லேசில் விட்டுவிடானே.

சேனைத்தலைவர்:—அரசே வருந்தாதீர் இதோ நான் யுத்தத்திற்குச் செல்கிறேன் எதற்கும் உமது புத்ரனை வரவழையும்

[சேனைத்தலைவர் போகிறார் சுமாலி வருகிறான்.]

## துயுமத்சேனன் தரு.

(சுந்தர ப்யாரி மைஹோ)

இப்படி நேர்ந்திட்டதே
என்செய்குவேன் சர்வேசா
எப்படி சகித்திடுவேன்
இம்சைசெய்வாரே கைலாசா (இ)

வைரிகள் கோட்டையைச்சுற்றி
வளைத்துக்கொண்டாரே பாரும்
ஐயோ யிதற்கென்னசெய்வேன்
ஆதரித் தெங்களைக் காரும் (இ)

எதிரியும் பலவானுச்சே
ஏதுந் தோன்ற வில்லையே
இதற்கென்ன செய்வேனுனே
இன்றுனேன் மிகத் தொல்லையே (இ)

இந்தசமய மருகில்
என்மக னிருப்பா னுனல்
வந்த சத்ருக்களைக் கொய்து
வாட்டி வதைப்பேனே மென்மேல் (இ)

சுமாலி:—அரசே! ஏன் வருந்தவேண்டும்! இவைகளெல்லாம் வீண் பயன்! இனி ஆகவேண்டியதை முடிப்பதே சிலாக்கியம்.

துயுமத[illegible]:—ஆம் நீசென்று மணிபுரம் போயிருக்கும் என் மைந்தனை அழைத்[illegible]கொண்டு வருவாயாகில் நாம் ஜெயம் பெறுவது சுலபம், சீக்கிரம் போ[illegible].

சுமாலி:—மகாராஜா! எதிரிகளின் சேனைகள் நம் கோட்டையைச் சுற்றிலும் முற்றுகை போட்டிருக்கின்றது, பார்த்தேன்! பயந்தேன்! என்னசெய்வேன் தங்களை வந்து முக்கியமாய் வந்து காணவிருக்கின்றதே யென வெகுநேரம் வரையிலும் யோசித்து, வேறு வேடம்பூண்டு அவர்களை யேமாற்றி நான் பக்குவமாய் உமக்கு முன் வந்திருக்க, மறுபடியும் எப்படி வெளியிற் போவதென்று இதுவே வியாகுலமாயிருக்கின்றது..

துயுமத்சேனன்:—சபாலி! இந்த சமயம் நீ காலஹரணம் செய்யாதே நீ எப்படியாவது வெளியிற்சென்று என் மைந்தனாகிய சத்தியவந்தனையழைத்து வந்து, எதிரிகளை வென்று, என்னை விடுவிப்பது உன் கடமை. செல்! இனி நில்லாதே! யோசியாதே! அப்பா சுமாலி வெளியிற்சென்று ஆகவேண்டியதைப்பற்றி யோசி!

சுமாலி:—ஐயையோ எப்படிபோவேன். நான் இங்கே வரப்பட்டபாடு உன்னைப்பிடி என்னைப்பிடியென்று மிகவுங் கஷ்டத்துடன் வந்தேனே.

[போகிறான் சேனைகள் வருகிறது.]

கடகேது தரு

(லொகாரிசன்மயோசலோ)

சிபாய்களே துரிதமாகச்
செல்வீர்க ளாக்ரோஷமாய்
அபாயம் வந்தாலும் எதற்கும்
அஞ்சிடா தீரேகமாய்

சேனைகள் தரு.

அரசே எதற்குமே
அஞ்சோம் அஞ்சோம் அஞ்சோமேயாம்

கடகேது தரு,

அணியணி யாக வாரீர்
இணைப்பிரி யாமலேநீர்

சேனைகள் தரு.

இதோ இதோ வருகிறோம்
ஹதாஹதம் புரிகிறோம் (சி)

கடகேது:—வீரர்களே! இனி உங்களாலானதைப் பாருங்கள். நம்மோடெதிர்க்கும் வீரர் எவருமில்லை, வாருங்களிப்படி.

[உட்பிரவேசித்தல்]

தரு.

(வாரீர் அண்ணமாரே)

துடி துடித்திட துயுமத் சேனனை
அடி அடி அடி பிடி பிடி பிடி
நொடிக்குள் கட்டு வீர் (து)

கடுகினிற் கட்டி முன்
விடுப்பீரே நெட்டி
கிடு கிடுவென புவியதிரவே
திடுக்கமுன் விடுவீர் (து)

[வீரர்கள் துயுமத்சேனனை கட்டிக் கொண்டு வருகிறார்கள்]

தரு

(வரமாட்டேனென்று சொன்னாளா)

பதறப் பதற நீசென்று
பத்மாக்ஷி யவளை யின்று
பக்குவமாகக் கட்டி
இக்கணம் வாரீர் நெட்டி
செல்வீர்கள் துரிதமாய். (ப)

கூக்குரலிட்டா லப்படியே
குத்திக்கொணர்வா யிப்படியே
சீக்கிரமாகவே சென்று
ஜிவ்வென்றே தாரீ ரின்று
செல்வீர்கள் துரிதமாய் (ப)

பின்கட்டாய் கட்டிக் கொண்டு
பிடித்து தந்திடுவீர் கண்டு
சின்னபின்னஞ் செய்திடு வேன்
சிதைக்க தாரீரினியே தான்
செல்வீர்கள் துரிதமாய் (ப)

[பத்மாக்ஷியையுங் கட்டிக்கொண்டு வருகிறார்கள்]

துயுமத்சேனன் - பத்மாக்ஷி தரு.

(சுஜேஷாதுமேரா)

மஹாராஜனே என்ன பிழைகள் செய்தோம்
மன்னித்தாள்குவீர் மலரடிபணிந்தோம் (ம)

நிர்ரபராதிகளை நீர் கார்த்திடும்
தர்ம சொரூபா தயை வைத்திடும் (ம)

கடகேது:—சட் பேசாதீர்கள்! அடே வீரர்காள் இவ்விருவர்களின் கண்களைக் குத்திப்பெயர்த்து, பிறகு இருளடர்ந்த காட்டிற் கொண்டுபோய் விடுப்பீர்கள். சீக்கிரமாகட்டும் காலதாமதம் செய்யாதீர்கள்.

தரு

இப்படி செய்வதனாலே என்ன லாபமோ
எப்படி சகிப்போம் எம்மே லேன் கோபமோ (எ)

தந்தைதாய் குருதெய்வம் சகலம் நீயே
சிந்திக்கும் எம்மை சீக்ரம் காப்பாயே (ம)

நம்பிநின்ற எம்மை நடுங்கச்செய்யாதே
வம்பு விளைக்காதே வந்தனமிப்போதே (ம)

கடகேது:—அடே நான் சொல்லியபடி செய்வீர்கள், நீங்கள் இவர்கள்மீது பச்சாத்தாபப்பட்டுவிட்டுவிடுவீர்களாகில், உங்களையு மவ்விதம்செய்வேன். சீக்கிரம்கொண்டு செல்லுங்கள்.

---

## 2-வது சீன். இருண்ட காடு.

[கொலைஞர் நெருப்பிற் காய்ந்த இரும்பு சலாகைகளாற் கண்களைக் குத்திப் பிடுங்கிவிட்டு செல்கிறார்கள்.]

துயுமத்சேனன் - பத்மாக்ஷி

தரு.

(கானகத்தில் நாமலைய)

ஐயையோஎம் கண்கள்போச்சே
ஆவியும் பதறலாச்சே

வையகத்தி லிக்கொடுமை
வந்ததே எவர்க்கு மேச்சே (ஐ)

அதிகமாக நோய் மீறுதே
அப்பப்பாமெய்யும் சோறுதே
பதறவே கண்களைப் பிடுங்கி
பாவி விட்டான் மன மாறுதே (ஐ)

திக்கில்லாத பரதேசி போல்
தியங்கவிட்டா னிந்தப்பார் மேல்
சிக்கிலாது காத்திடுவாய்
சிவசிவமே நோகுதே கால் (ஐ)

---

## 3-வது சீன். மத்ராபுரி நந்தவனம்.

[சகிகள் வருகிறார்கள்.]

சகிகள் தரு.

(பார்ஸி மெட்)

ஒயிலாக வாரீர்கள் நாமொன்றாக
ஓடி விளை யாடுவோம்
நாடியே குயில்கள் பாட
மயில்களாட
நாமகிழ்வோம் மெல்லி
நந்தியாவட்ட முல்லை
நல்ல கொடி மல்லி
நலமாகப் பறித்தே சூடி நாம்
நந்தவனம் சுற்றி பார்த்திடுவோம்
நமக் கெஜ மானி
நவ குண வேணி
நளின கல் யாணி
நங்கை வாராள்
மங்கை யிலாள்
சங்கை ரதி
தங்கை (ஒ)

[சாவித்ரி வருகிறாள்.]

சாவித்ரி - தரு.

(சைலாசகதியாம்)

இதோ பாரீர்கள் மலரே
ஜோரான கலரே
யாருமிங் கிலரே சகிமாரே (இ)

சகிகள் - தரு,

பாரிஜாதம் பவளம் தேவ
தாரி செந்தா மரையும் ரோஜா (இ)

சாவித்ரி - தரு.

மயில்களாட குயில்கள் பாட
ஒயிலாயன்னந் தனையே தேட
நயமாயஞ்சுகந் தானோட
நாகணமைனு கொண்டாட (இ)

சகிகள் - தரு.

நாமுமங்கே போவோ மெல்ல
நன் மண மிதே தீ தல்ல (இ)

சாவித்ரி - தரு.

பூமலர் வனம் போலெங்கும்
பூவிலுண்டோ விண்ணிலங்கும்

சகிகள் - தரு.

தேவருல கத்தோர் யாரும்
திரும்பிப்போகாரிதைக் கண்டோரும் (இ)

சாவித்ரி:—ஆம்! என்னதடை! நம்பூஞ்சோலையை அந்த இந்த்ராதி தேவர்களுங் கண்டுவிட்டார்களேயாகில் மறுபடியு மவர்களிடம் செல்லவேமாட்டார்கள்! இது உண்மை.

தரு

(அள்ளி யள்ளி குடிக்கும்)

துள்ளி துள்ளி எகிரி
கிள்ளைகள் பாடுதே
தெள்ளிய ஜலமு மோடுதே

மயில்க ளாடுதே
உள்ள மெதையோ தேடுதே
உருகுதே மனம் உபரதித் தினம்
தருகுதே குணம் தயங்கு திங்கனம் (அ)

ஒன்றோடொன்று பட்சிகள்
ஓடி பறக்குதே
நின்று சிறகை விரிக்குதே
கொக் கரிக்குதே
சென்றுவந்து மறிக்குதே
சேயிழைமாரே செல்கிறஜோரே
ஹா யிதைப்பாரே அறிந்திடுவீரே (அ)

கண்டு கண்டு மந்திகள்
கொண்டா னடிக்குதே
வண்டுகளுங் கடிக்குதே
மெய் துடிக்குதே
தண்டாமரைத்தேன் குடிக்குதே
குண்டு மல்லிகை குடமல்லிகை
செண்டு மல்லிகை சிகப்பு மல்லிகை (இ)

இந்த நந்த வனத்தின்
சுற்றும் நீரோடையே
சந்திர காச மேடையே
மண வாடையே
சுந்தர மாகக் காடையே
சுற்றியுலாவுது சுகமாய்த் தாவுது
கத்தியே கூவுது ககனமாய்மேவுது (இ)

சகிகள்:—தேவி! பற்பல விருக்ஷங்களும் எவ்வளவு செழித்தோங்கி யிருக்கின்றது பாரும்! ஆ! என்ன குளிர்ந்தவாடை இது,

சாவித்ரி:—சகிகாள்! அந்த மரங்களின் மீது பற்பலவிதமான பக்ஷிகள் கூட்டமாகக் குந்தி, எட்டி, எகிரி, சிவ்வென்று பறக்குது பார்! ஆ ஹா! இதனால் நம்மனம் எவ்வளவு உற்சாகமாக யிருக்கிறது.

சகிகள்:—இதோபாரும் அந்த மல்லிகைக்கொடி, முல்லைக் கொடியுடன் சேர்ந்து, அந்த சந்தன மரத்தின் மீதேறி படர்ந்திருக்கின்றது பாரும்.

சாவித்ரி:—மயில், குயில், கிளி, புல்புல், மைனா, நாகணவாய்ப்புள் முதலிய பக்ஷிகள் இசைப்பதைக் கேட்கும் என் செவிகள் ஆனந்தத்தையே தருகின்றது, அதோ மான்கள் பார் துள்ளித் துள்ளி குதிக்கின்றன.

சகிகள்:—ஆம் தேவி! மேலும் இது வசந்த காலமானதால் தென்றற் காற்று வீசுவதைப்பாரும்.

சாவித்ரி:—இப்போது வீசும்படியான குளிர்ந்த வாடையினால் என் மனம் மிக்க ஆனந்தத்தைத் தருவதுமின்றி, ஏதோ ஒருவிதமாகவு மிருக்கிறது.

சகிகள்:—தேவி! உமக்கு எவ்வன காலமல்லவா! அப்படிக்குத் தானிருக்கும். வாரும், நாம் அரண்மனைக்குப் போகலாம்.

சாவித்ரி:—வந்தது வந்தோம் ஜலக்ரீடை செய்துவிட்டுப் போகலாமென என் மனம் நாடுகிறது

சகிகள்:—ஆனால் வாரும் உம் மனப்படியே செய்யும்,

சாவித்ரி:—நல்லது. (போகிறாள்) சகிகாள் அதோ பார்! யாரோ இரண்டுபேர் வருகின்றார்கள். என்ன பேசுகின்றார்களோவென கவனிப்பாய்.

சகிகள்:—தேவி! அதை நாமேன் கவனிக்கவேண்டும். வருகிறவர்கள் ஆடவர்கள் தான்.

சாவித்ரி:—அவ்விருவரில் அவர் யாராக யிருக்கலாம்.

சகிகள்:—அவரை கவனிக்கில் யாரோ ஒரு ராஜகுமாரனைப்போலிருக்கின்றது. இனி நாமிங்கிருப்பது தகுதியல்ல!

தரு

(நீ வருந்தாதே)

செல்குவோம் வாரீர்
தேவியேபொழுது போகுதே (செ)
மெல்லியே நில்லாதீர்
வேகமாக நாமெல்லோரும் (செ)

சாவித்ரி - தரு.

ஜலக்ரீடை யாடி செல்வோம்
ஜல்தியாகவே கொண்டாடி (ஜ)

பலவர்னப் பட்டாடை
பாங்கிகளே கொண்டு வாரீர் (ஜ)

சகிகள் - தரு.

இங்குமைவிட்டு நாங்கள்
எப்படி செல்வோமுட்பட்டு (இ)

தங்கள் தாய் தந்தையர்
தண்டிப்பாரே என்செய்குவோம் (இ)

சாவித்ரி - தரு.

தீங்குநேராது சென்று
தீவ்ரமாய் வாரீரிப்போது (தீ)

பாங்கிகாள் போய்வந்தால்
பரிவாய் நீரிலாடிப் போவோம் (தீ)

சகிகள்:—தேவி! நீரோ எவ்வனமங்கை! மேலும் விவாகமாகாத நங்கை! அதனிலும் ஆடவர்களினெதிரில் வரக்கூடாதவள்; இந்த சமயம் உம்மைத் தனித்துவிட்டுச் செல்வது நலமல்ல! இவையனைத்தும் மகாராணிக்குத் தெரியுமாகில், தக்க தண்டனை விதிப்பார். வா போகலாம்.

சாவித்ரி:—சகி! அதோ பார் அந்த இரண்டு புருஷரில் அவர் தான் மிக்க அழகுடையவர்! மன்மதசொரூபி! ஆ! ஹா!

தரு

(யாரதிலாரா திலபருஹை)

ஆரெவர்தானோ அறிகிலேனே
அறிகிலேன் தெரிகிலேன் குறிகிலேனே (ஆ)

அவரைக் கண்டதுமுதல் அகமுமுருகிமனம்
அலையுதடி மதி
குலையுதடி (ஆ)

கஜல்

அரிவைமாரே யெனக் கதளுலித்தேகம்
அனல்மெழுகாகியே யாகுதே சோகம்
இருகால்களயர்ந்துமே எடுக்குதே தாகம்
இதனைத்தீர்க்க உம்மா லியலாது வேகம்
இனி அரைக்ஷணமுயி ரிராது இராது சகி
என் செய்குவேன் இதற்
கென் செய்குவேன் (ஆ)

சகிகள்:—தேவி! இதென்ன தாம் தன்னை மீறி, ஏதேதோ வார்த்தையாடுகின்றீரே, அவர் யாராயிருந்தாலும் நமக்கென்ன! நாம் இனி செல்வதே நலம், இங்கிருப்பது தகாது.

சாவித்ரி:—சரி! நீ கூறினது நன்குதான்! எனக்காளுல் ஒர்வித வியர்வை யுண்டாயிருக்கிறது. நீ முன்பு சொன்னபிரகாரம் ஜலக்ரீடை செய்துவிட்டுப் போகலாம். நீ சென்று சீக்கிரமாக என் பட்டாடைகொண்டுவா!

[ஒரு சகி போகிருள், மற்றவர்கள் நந்தவனத்திற்குட் சென்றனர்கள்]

(தனிமொழி) நமக்கோ! வந்தவரிருவரில், அந்த அழகான புருடன் மீது நம்மனம் ஐக்கியமாகினது. இதற்கென்ன யோசனைசெய்வதோ! கவனிப்போம்! அவர்களும் வருகிருர்கள் வரட்டும்! என்ன மொழிகின்றூர்களோ கவனித்து பிறகு, செய்யவேண்டியவைகளைச் செய்வோம்,

[ஓர்புறமாகச்செல்ல, சத்யவந்தனும், சுமாலியும் வருகிருர்கள்.]

சத்யவந்தன்:—சுமாலி! நம் குதிரைகட்கு இன்று அதிக கஷ்டம்,

சுமாலி:—ஆம் அதிக தூரமிருந்து வந்தபடியால் நமக்கே தான் கஷ்டம், அவைகட்கில்லை,

சத்யவந்தன்:—அப்படிச் சொல்லாதே! நம்மை சுமந்து வந்ததாயிற்றே! அதற்கு எவ்விதமான கஷ்டந் தோன்றும்! அதோ பார் மூச்சதிகமாகவே யிருக்கின்றது; நீ சென்று இவைகட்கு ஜலங்காட்டிவிட்டு நீயும் தாகசாந்திசெய்து, எனக்கும் ஜலங் கொண்டுவா!

சுமாலி:—அதற்கென்ன! என்னால் நடக்க சக்தியேயில்லை, காரணம், குதிரை என்னை தூக்கி வந்ததினால் என் இரண்டு துடைகளும் நோகிறது, ஏனெனில் உன் குதிரை சற்றுதிடம், என் குதிரை சற்றிளைத்ததாலும், அதன் தேகமெல்லாம் ஊன்களில்லாது முற்றும் எலும்பாகவே யிருக்கிறதாலும் எனக்கவ்விதமான கஷ்டம் ஏற்படுகின்றது, நீ என்ன! உன்மாமன் வீட்டிலிருந்து சுகத்தோடு வருகின்றனை! நான் சாலவபுரியிலிருந்து வந்து, உன்னை யழைத்துக்கொண்டு, உடனே திரும்பினேன் கவனித்துப்பார் யாருக்குக் கஷ்டமென்று,

சத்யவந்தன்:—இருக்கட்டும். அதோபார் நம் குதிரைகட்கு நுரை தள்ளுகிறது, சிறுது நேரமாயின் அவைகளிறந்துவிடும், பிறகு நம் பிரயாணத்திற்கு தடங்கல் ஏற்படும், இந்தவிளையாட்டுத்தனம் இப்போது வேண்டாம், பிறகாகட்டும் போ சீக்கிரம்.

சுமாலி:—அப்பப்பா அது என்னால் முடியவே முடியாது! எனக்கு தாகமதிகமாகயிருக்கின்றது.

சத்யவந்தன்:—அதைப்பற்றியே அவ்விதம் கூறினேன் இனியாவது தாமதியாதே, நீ அப்படி போகாவிட்டால் நான்சென்று என் குதிரைக்கு ஜலமருந்தவிட்டு, நானும் தாகந்தீர்ந்து. அப்படியே ஊருக்குப் போகிறேன் நீ மெல்லெனவா.

சுமாலி:—பேஷ் உன்னுடன் வந்ததற்கு பலன் இதுதானோ? சரி சரி, தெரிந்தது உன் இஷ்டப்படியே செய்யும் நான் இங்கேயே யிருக்கிறேன்.

சத்யவந்தன்:—அப்படியா, ஆனால் இதோ நானே போகிறேன்.

சுமாலி:—வேண்டாம் வேண்டாம் நில்லு கோபிக்காதே, நானே செல்கிறேன்

[சுமாலி போகிறான்]

சத்யவந்தன்:—ஆ ஹா இந்த பூஞ்சோலை என்னசொகுசானதாயிருக்கிறது, என்ன உன்னதம்.

தரு.

இந்த பூஞ்சோலை என்ன சிங்காரம் உல
கெங்கும் காணேனிதுபோல் செம்பீரம்

மந்தாரை ரோஜா மன்மதபாணம்
செந்தாமரையாலே கொள்ளுதே நாணம்
சந்தனம்பாரி ஜாதமுமல்லி
சிந்தைகலக்குதே செவ்வந்திமுல்லை (இ)

மாமரம் பலா விளா மாதுளைதேனே
நாமிங்கு களைதீர்க்க நல்லயிடம்தானே
பூமலர் சுற்றிலும் பூரிக்கவீசுதே
தேமணக்கயிங்கு திகைக்கமெய் கூசுதே (இ)

இது யாருடைய வனமோ அறிகிலேன! இங்கிருக்கும் உன்னதத்தால் இன்னும் சிலகாலமிங்கனே யிருக்கலாமென மனமும் நாடுகின்றது! அடடா என்னவாசம் வீசுகின்றது! ஆஹா வண்டுகள் ரீங்காரஞ் செய்துகொண்டு, ஒவ்வொரு புஷ்பங்களிலுங்குந்தி, அதிலுள்ள தேனையருந்தி செல்கிறது! அதோ மயில்கூட்டங்கள் தோகையை விரித்தாடுகின்றது, அதோ குயில்கள் பாடுகின்றது! கிளிகளும் பாடுகின்றதுகள். ஆஹா என்ன இனிமையாக யிருக்கின்றது! பேஷ் பேஷ் இவைகளைக்கேட்ட நம்மனம் ஓர்வித குதூஹலத்தையும் விளைவிக்கின்றது, அதோ போகும் ஜலத்தைப்பார்த்தால் இளநீர்போல விருக்கின்றது! ஆஹாஹா என்ன குளிர்ந்தவாடை வீசுகின்றது! இதனால் நமக்கு மிக்க பரவசத்தையே தருகின்றது. நல்லது நாம் அந்த சந்த்ரகாசமேடைமீது சற்றுநேரம்சயனிப்போம். ஜலத்திற்குப்போன சுமாலி வரட்டும்.

[சத்யவந்தன்! பூஞ்சோலையின ழகைப் பார்த்துக் கொண்டே உலாவி வருகிறான். அதுசமயம் ஓர் பெரும்புலி சாவித்ரியைத் துரத்திக்கொண்டு வருகிறது.]

சாவித்ரி:—ஆஹா ஐயையோ! சர்வேசா புலி துரத்திவருகின்றதே! சகிகளையுங் காணேமே! ஐயையோ என்னசெய்வேன்.

சத்யவந்தன் தரு.

(ஆ ஆ எறியுதே)

ஆஹா ஹா ஒரு புலி அரிவையைத்துரத்துதே
ஓ ஹோ ஹோ கர்ஜித்து முன்னதாய் வருகுதே (ஆ)

கொடுமைசெய் வேங்கையைக்
கொல்லுவேன் துரிதமாய்
தடுத்து வதைத்திடுவேன்
க்ஷணத்திலா ரோஷமாய் (ஆ)

[புலி மடிகிறது.]

இதென்ன அற்புதம்! நாமெப்படி அந்த வேங்கையைக்கொன்றோமோ தெரியவில்லையே! நம் கரத்தினிடமாக யாதொரு ஆயுதமுமில்லை! எப்படி கொன்றோமோ! நாமிந்தசமயம் இங்கிராவிடில் அப்பெண்மணியின் கதி என்னவாகும்! அம்மாதுசிரோன்மணி யாரோ தெரியவில்லை! யாராளுல் நமக்கென்ன! நாம் அந்தப்புலியைக் கொன்றவேகம், ஒருவாருன இளைப்பைத்தருகிறது. ஆகலின் இதோ தோன்றும் மேடைமீது சற்றயரலாம்.

[சயனிக்கிருன்.]

சாவித்ரி:—நம்மைத் துரத்திவந்த புலியைக் கொன்ற வீரன் யாரோ தெரியவில்லை! நற்சமயத்திலவர் உதவினர்! தேவன் அவரை ரக்ஷிக்கக்கடவது! இந்தசமயம் அப்புண்ணிய சொரூபி இல்லாவிடில் நாம் மடிந்தேயிருப்போம், இது உண்மை. அவர் எங்கனம் சென்றுரோ! தெரியவில்லை, இந்த நந்தவனத்திற்றுனிருப்பார்! தேடிப்பார்ப்போம், எப்படியும் அகப்படுவார். அவர் அகப்பட்டால் நாம் அவருக்கு தக்க பரிசளிப்போம், பார்ப்போம். இதோ சயனித்துக்கொண்டிருப்பவர் யார்! நம்மைக்காத்த நாயகன்தான்.

தரு

(இவர்யாரோ)

இவர் யாரோ அறிகிலேனுனே
எவரது புத்ரனோ
இவர் ராம பத்ரனோ

எந்தவூரரசனோ காணேன் எனக்
கேற்றதோர் சரசனோ தோணேன்
சுந்தரன் பேருதவிக் கென்ன
செய்வேன் தொண்டுவிற்பன்ன (இ)

காமனோ காருண்ய கந்தனோ இந்த்ரனோ
சோமனோ குபேரனோ யாரோ எந்தப்
பூமனோ இவர் எந்த ஊரோ
பூசுரனிராவிடிற் புலியுங் கொன்றிருக்குமே
ராமனோ நாமகளின்
மாமனோ யறியேனிங்கண் (இ)

ஆ! ஹா! என்ன அழகு! என்ன காந்தி! என்ன ரூபம்! என்ன காம்பீரம்! என்ன மிடுக்கு! நம்மைத் துரத்தினபுலியைக் கொன்றதி னிமித்யம் இவர் களையாயினர்போலும், அப்படியாகத் தானிருக்க லாம். இப்பேர்ப்பட்ட தாட்டிகனையன்றோ நாம் வதுவைசெய்ய வேண்டும்! இனிநம்மால் தாளமுடியாது! இவரை எழுப்பி, இவரது விர்த்தாந்தம்விசாரித்துப் பிறகு நம் மனப்படியே செய்வோம்! நம் மாதாபிதாக்கள் மறுக்கினும் நானெப்படியும் மணர்வேன்! மற்றவ ரைக் கனவிலுங்கருதேன். எழுப்பலாம்!

தரு.

(பம்பாய்க்கு ஜாயதா)

எந்த னாயகா எழுந்திரு
இந்தநித்ரை உனக்கேற்குமோ-ஆ! ஹா!
இந்தநித்ரை உனக்கேற்குமோ (எ)
உந்தன் சகியான்
வந்தேனிதோ கண்திறந்து
சுந்தரனே பாருமே (நா)
உன் மனம் போலே - என்
மன்னுயிருந் திடுவேன்
கண்திறந்து பாருந் தான் (நா)

என் துரையே எழுந்திரும்! கண்திறந்துபாரும் உன் சகியாளை! ஏதோ எழுந்திரும். இப்பேர்ப்பட்ட நித்ரையாமா!

சத்யவந்தன் தரு

(எத்தாய் மயக்காதே)

என்னை ஏனோ எழுப்பினாய்
ஏந்திழையே.

சாவித்ரி - தரு.

எத்திசைபுகழும் - மத்ரா புரிமன்னன்
புத்ரியாமென்பேர்சா வித்ரி யாகும் (எ)

சத்யவந்தன் - தரு.

பூவையே தனித்திருப்பதேன்

சாவித்ரி - தரு.

புகன்றிடு வேன்

சத்யவந்தன் - தரு-

புகன்றிடு தான்

சாவித்ரி - தரு.

பூஞ்சோலையைப்பார்க்கவந்தேனுன்

சத்யவந்தன் - தரு

வந்தபெண் (எ)

கஜல்

ஓ ஹோ ஹோ பிரியமுடனிற்கும் மாதே
உன் மனதிலிருப்பதை யொளியாமலிப்போதே
உனக்கு மணமாயிற்று உரைப்பாய் பூங்கோதே
உத்தமி யவ்விதமிருந்தால் செல்வேன் பேதே

சாவித்ரி - கஜல்

என்மனதிலிருப்பதை இயம்பிடு வேனே
நன்னகர் ஸாலவபுரி த்யுமத்சேனராஜன்கோனே
தன்புத்ரன் சத்யவந்தன் மேல்மனதானேனே
இன்னுமணமாகவில்லை இனிய பூ மானே

சத்யவந்தன் - தரு

இதோ நானே சத்யவந்தன்
எந்திழையே

சாவித்ரி - தரு.
எந்தன் குல தெய்வம் எதிர்நின்றதுபோலே
வந்தீரென்முன்னுல் பலித்திடவே

சத்யவந்தன் - தரு
இனி - சிந்தைமெலியாதே சுந்தரியே (எ)

[பரஸ்பரம் நேசிக்கிருர்கள்.]

சாவித்ரி:—மன்ன ! தெய்வசங்கல்பம்போல் முடிந்தாயது! தாங்கள் அரண்மனைக்கு வந்து என தாய்தந்தை யறிய மணம் செய்து கொண்டு, என்னை தம்முடன் அழைத்துச் செல்லும்.

சத்யவந்தன்:—கண்ணே இப்போது வேண்டாம்! அதற்காக நான் மறுமுறை வந்து மணம்புரிகிறேன்;

சாவித்ரி:—ஏன் ! என்னகாரணம் ! தமக்கு என் தந்தையாலேதே னும் தீங்குவிளையுமோ வென்கிற எண்ணமோ!

சத்யவந்தன்:—அப்படிக்கல்ல! நான் மணிபுரம் சென்றிருந்தேன், அங்கு என் பிரியனுன சுமாலி வந்து, என் தந்தை அதிசீக்கி ரமா யழைத்துவரச் சொன்னதாகத் தெரிவித்தான். அதற் காக யான் வரும்போது, புலியைக் கொன்ற ஆயாசத்தால் சற்றயர்ந்தேன் ! தெய்வானுசங்கல்பம் உன்னையடைந்தேன் ! நான் சீக்கிரம் சென்று பிறகு வந்து சேருகின்றேன்.

சாவித்ரி:—அப்படியா ! சரி ! ஆனுல் எனக்கு ஒரு வரமட்டுந் தர வேண்டும்.

சத்யவந்தன்:—அதென்ன வரம் கேள் தருகிறேன்,

சாவித்ரி:—நான் தங்களைத்தவிற, இனிமீது வேறெவரையும் கண் ணெடுத்துங் கூடப்பாரேன் ! என்னைதங்கட்கு அர்ப்பணஞ்செ ய்துவிட்டேன் ! என்கற்புக்கு யாதொருபங்கமும் நேரிடாமற் காப்பது தங்கள்கடமை ! நான் மணந்தால் தங்களையே மணப் பேன் ! இதுவே சத்யம் !

சத்யவந்தன்:—சந்தோஷம் ! உன் மனதிற்கு யாதொரு விகல்பம் நேரிடாமலும், கற்புக்கு பங்கம் வராமலும், கூடியசீக்கிரமே வந்து மணந்துகொள்வேன்! இது உண்மை.

சாவித்ரி - தரு

(ஜட்டிபிட்டு கைஸேமிலும்)

இந்த எண்ணம் மாறவேண்டாம்
எந்தன் மணவாளா
எந்தன் மணவாளா - சொந்தமதவேளா - இனி (இ)

சத்யவந்தன் - தரு

சித்த மெத்த வாடிடாதே
சித்ரப் பாவையே
சித்ரப் பாவையே - பத்னிதேவியே - உன் (சி)

சாவித்ரி - தரு

என்னிட கோனே இன்னமுந் தானே
உன்னைமறவே னென்றுங் கோனே
அன்புடன்தேனே இன்ப சீ மானே
அஞ்சுகனே ரஞ்சிதமாய்
கொஞ்சிடுவோம் இனி (இ)

சத்யவந்தன் - தரு

சிந்தை வாடாதே சுந்தர மாதே
எந்த நிமையும் மறவேன்கோதே
சந்தோஷமாய் சடுதியிற் பேதே
வந்திடுரேன் நைந்தி டாதே
மந்தஹாசி இனி (சி)

சாவித்ரி,—பிராணபதி! என்னமோ யாதோவென்றுமாத்திரமிருக்கவேண்டாம்.

தரு

(சையாலகாயதோ)

பக்ஷமிருக்கவேணும் பத்தாவே என்னை
ரக்ஷிப்பதுன்பாரம் கோவே
இக்ஷணமுனைமப்பிரிய இல்லையே மனமே

லக்ஷணவதனா யிங் கனமே நீவாராய் (ப)
தக்ஷணம் பிரியேனே இனமே

சத்யவந்தன் - தரு.

அன்னிய மாதர் மீது மனமே வையேன்
உன்னிஷ்டம்போல் வருவே னனமே
கன்னியே வீணாக கவலைப்பட்டிடாதே
இன்பந்தருவேன் வந்து மட மாதே இனி
ஒன்றுக்கு மஞ்சவேண்டாங் கோதே (அ)

சாவித்ரி - தரு.

உன்னைக் காணும் வரையில் பிராணநாதா - நானும்
அன்னந் தண்ணீ ரருந்தேன் வேதா
சொன்னதுபோலே சுந்தரா நீரே
என்னோடிருந்து களிப்படை வீரே - எந்தன்
மன்னா தவறாமல் வா ரீரே

சத்யவந்தன் - தரு.

அடிக்கடி வருந்தாதே அன்னமே - விதிப்
படி முடிந்தது சொன்னேன் முன்னமே
மடந்தையே தேனே மணஞ்செய்வோம் நாமே
தடங்கல் செய்தால் பொல்லாத் தீங் காமே - முச்
சுட ரதிமதன்போல் வாழ் வோமே (அ)

[முத்தமிடுகிறான்]

சாவித்ரி:—போய்வரட்டுமா! மறவாதீர்:

[இங்குஇருவரும் நிற்க ஓர்புறம்சுமாலி யுவராஜனைபற்றவும், யுவதியை சகிகள் பற்றவுமா யிருக்கிறார்கள். இங்கு மௌனக் காட்சி]

## 4-வது சீன். வீதி

[சுமாலியும் சத்தியவந்தனும் வருகிறார்கள்.]

சுமாலி:—இளவரசே! நீர் இன்னேரம் எங்கு சென்றிருந்தீர்! என்னேரமாக ஜலம்வைத்துக் காத்திருக்கிறேன்.

சத்யவந்தன்:—சுமாலி! நீவராததனால், உன்னைத் தேடிச் சென்றேன் சென்றவிடத்தில் ஓர் பெரும்புலியை வேட்டையாடினேன்.

சுமாலி:—அப்படியா! (தனிமொழி) நான் மறைவாகயிருந்து இவர்களிருவரும் பேசிக்கொண்டிருந்து நேசமானதைக் கண்ணாரப்பார்த்திருந்தும், புலிவேட்டையாடினதாய்ப் புகல்கின்றார்! நல்லது! இன்னும்கேட்டு, அவன்வாய்மொழியினாலேயே தெரிந்துகொள்வோம். நீபுலிவேட்டையாடினதாய்ப் புகன்றாயே அது புலியா! அல்லது சிறுத்தையா!

சத்யவந்தன்:—பெரும்புலிவேட்டைதான் ஆடினேன்.

சுமாலி:—அப்படியா! பேஷ்! அது ஆணோ! பெண்ணோ!

சத்யவந்தன்:—இதையெல்லாம் யார்கவனித்தது! சுமாலி! நீ என்ன பரிகசிக்கிறாயே!

சுமாலி:—வேறொன்றுமில்லை! நான் கேட்டதை வேறுவிதமாகப்பாவிக்கவேண்டாம். என் ஒருவாறாகயிருக்கின்றீர்! உமக்குக் கவலையெல்லாம் அந்தப்பெரும்புலியின் மீதிருக்கிறாப் போலிருக்கிறது உண்மைதானே! வெளிப்படையாகப் பேசுமே! என் மறைக்கவேண்டும்.

சத்யவந்தன்:—என்ன! சுமாலி! மறுபடியும் விளையாடுகின்றாயே!

சுமாலி:—இல்லை! இல்லை! புலிவேட்டையாடினதில்! புலியை நீஜெயித்தாயா! அல்லது புலியுன்னை ஜெயித்ததா! அது அழகாகயிருந்ததா!

சத்யவந்தன்:—நான் சொல்வதைக்கேள்! நீ ஜலத்திற்காகப் போனபிறகு! ஓர்புலி யொருயுவதியைத் துரத்திவருவதைநான்கண்டு அதைஎன்கரத்தாற் கொன்றேன்.

சுமாலி:—பேஷ்! உன் சாமார்த்தியமே சாமார்த்தியம்.

சத்யவந்தன்:—பிறகு! நான் களைப்பால் நந்தவனத்திற்படுத்திருக்க ஓர் சுந்தரமாது என்னை எழுப்பினுள்!

சுமாலி:—அப்படியா! சரி, பிறகு என்னநடந்தது.

சத்யவந்தன்:—அவளது விர்த்தாந்தம் யாவுந்தெரிந்தேன். நீ ஜலத்திற்கு சென றனையே! அங்கென்ன விசேடம் நடந்தது.

சுமாலி:—வேறென்றுமில்லை! இரண்டு புலிகளைதான் கண்டேன். அதில் பெண்புலி பட்டாடை தரித்து, தக்க நகைகளுடனிருந்தது; அதன் சமீபத்திலோ ராண்புலி மீசையை முறுக்கிக்கொண்டு, அலங்காரமான உடை யணிந்துகொண்டு, கொஞ்சிக் குலாவியிருந்தது.

சத்யவந்தன்:—சரி! நாம் போகலாம் என்னிடம் விளையாடாதேவா!

சுமாலி.—எங்குபோவது! புலியைப் பார்க்கவா!

சத்யவந்தன்:—பேசாமல் வா!

[போகிறுர்கள்]

---

## 5-வது சீன், காடு.

துயுமத்சேனன் - பத்மாக்ஷி

தரு

(கானகத்தில் நாமலைந்து)

கண்களிழந்து கலங்கலானேம்
  கானகத்தில் ஓ தெய்வமே
காசினியைக் கவர்ந்தான் பாவி
  காலங்கழிப்ப தெவ்வாறே நான் (க)

சத்ராதி கடகேதுவினுல்
  தவிக்கலானே மிக் கெதி யாய்
சத்ரம் சோலைசூழகவைத்த
  தர்மபலனிதுவோ நீயாய் (க)

இப்படிக்கு வருமென்றேதா
னெண்ணிடாமற் போ னேமே
எப்படி சகிக்கப் போரோம்
என்னசெய்வோ மினி நாமே (௬)

ஒன்றும் வழி தெரியவில்லையே
ஓ ஹோ ஹோ ஐய பரமேசா
கொன்றுவிட்டா லாகில்நலம்
கொடுமையின்றிக் காரும் ஈசா (௬)

நமது குமாரன் மணிபுரத்திலிருந்து இன்னும் வரவில்லையே! என்ன காரணமோ! சுமாலி போய் தெரிவித்தானோ! இல்லையோ! ஆ! குமாரகா!

[சத்யவந்தனும், சுமாலியும் வருகிறார்கள்.]

சத்யவந்தன்:—யார் குரல் சுமாலி அதைக்கவனி

சத்யவந்தன் - தரு

ஐயையோ தந்தையே அரும்பாவி நம்மிட
அரசை லகுவாக அபகரித் திந்த
அநியாயமுஞ் செய் தானோ
அங்கம்பதற - ஆவிசிதற - பிரமன்
அலைந்திட வமைத்திட்டானோ (ஐ)

துயுமத்சேனன் - பத்மாக்ஷி.

தரு.

தடங்கலில்லாமலே திடும்பிரவேசமாய்
படையுடனெருங்கியே முடியைக்கைக்கொண்டான்
கடகேது மா பாதகன்
கண்ணைக்குத்தி - காவலமர்த்தி - எம்மைக்
காட்டில் விடுத்தனனே

சத்யவந்தன் - தரு.

தந்தையே நான் சென்று அந்த கடகேதுவை
நொந்திட வாட்டியே வந்திடுவேனுன்

மைந்தனை யனுப்பிடுவீர்
எந்தலோகம் - ஏகினும் - அவனை
இனிநான் விடுவ தில்லை

துயுமத்சேனன் - பத்மாக்ஷி

தரு.

தன்பலமு மெதிரிதன் பலமுங் கண்டல்லோ
அன்யனுடன்சண்டை நின்றுசெயவேண்டும்
என்றறிவாய் கண்மணி
இனிமீதே - ஏகிடாதே - அந்த
இறைவன் செயலிதுவே

சத்யவந்தன்:—அடடா! இதுஎன்ன கொடுமை! நானில்லாத சமயம் பார்த்தல்லவா இவ்விதம் செய்தான்! இப்போதே நான் சென்று அவனைவென்று பழிக்குப் பழி வாங்கிவருகின்றேன், விடைதாரும் சென்று வருகின்றேன்,

துயுமத்சேனன்:—நிதானி ! அவசரப்படாதே !

சத்யவந்தன்:—சுமாலி! நீ வந்த உடனே இதையறிவித்திருந்தாலாயின் இக்கதி நேரிடாதே ! இதற்குக் காரணம் நீயேதான்,

துயுமத்சேனன்:—கண்மணி நான்தான் கூறவேண்டாமென்று சொல்லியனுப்பினேன்! சுமாலிமீது கோபியாதே.

சத்யவந்தன்:—அப்படியா! நல்லது! தந்தையே நான் தனிமையாகச் சென்று, அந்தசண்டாளனை செயித்து, நம் நாட்டைமீட்டு அவன் செய்திருக்கும் தீங்குகட்கு பதின்மடங்கதிகமாய்ச் செய்துவருகின்றேன் இப்போதே விடையளியும்.

பத்மாக்ஷி:—பாலா! நீ செய்வா யென்பதற்குத் தடையில்லை ! ஆனல் நம் கெட்ட காலம் ஒழியட்டும்! அதுவரையிலும் இக்காட்டிலேயே சஞ்சரித்திருப்போம்

சத்யவந்தன்:—இப்பேர்ப்பட்ட கொடுமை நமக்குச் செய்திருக்க, என்மனம் நிற்குமோ! உத்தரவளியும் சென்று வருகிறேன்.

துயுமத்சேனன்:—புத்ரா! முன்னதாக எனக்கு ஒரு வரந்தா!

சத்யவந்தன்:—என்னவரம் வேண்டுமோ! என்னாலாவது என்ன! அப்படியே கொடுக்கிறேன்.

துயுமத்சேனன்:—சந்தோஷம்! அதாவது, நீ தனியாய்ச் சென்று போர் புரிவதில்லையென்றும், எங்களைவிட்டுப் பிரிவதில்லை யென்றும், வரந்தான் தரவேண்டும்.

சத்யவந்தன்:—அப்படியா! தந்தையே! இப்படி தாம் கேட்டது நம் காலவித்யாசமே தான்! இதைப்பற்றி உம்மை வெறுப்பதிற் பயனில்லை.

துயுமத்சேனன்:—பாலா! என்ன ஏதேதோ பேசிக்கொண்டிருக்கின்றனை.

சத்யவந்தன்:—ஒன்றுமில்லை! எங்கும் போகவேண்டாமென்று தடுத்துவிட்டீரே.

துயுமத்சேனன்:—அப்பா சுமாலி! எங்கள் கதி இப்படியாச்சுது! நீ சாலவபுரிக்கேகி உன் மாதுமக்களுடன் வாழ்வாயாக.

சுமாலி;—மஹாராஜா! நான் சின்னப்பிராய முதற்கொண்டு தங்களிடம் சுகத்துடனிருந்து, தீங்குவந்த காலையிற் போய்விடுகிறதா! தவிற தாங்கள் காட்டிலலைய விடுத்து நான் நாட்டுக்குச் செல்வதா! நானும் உங்களுடன் தானிருப்பேன் மன்னிப்பீர்.

துயுமத்சேனன்:—சந்தோஷம்! சுமாலி நீயே நண்பன்! புத்ரா! நான் தடுத்ததற்கு நீ சிந்தை மெலியாதே!

சத்யவந்தன்:—தந்தையே! நானும் சுமாலியும் சென்று தங்கட்கு ஆகாரம் சேகரித்து வருகின்றோம் விடையளியும்.

துயுமத்சேனன்:—சென்றுவா பாலா!

[போகிறார்கள்]

---

**6-வது சீன், மத்ராபுரி கன்னிகாமாடம்.**

சாவித்ரி - தரு.

(அப்ஸோஸயிஸ்கு)

மித்ரன் வராத தால் நானே
மிகவும் சோகிக்கலா னேனே
நித்ரையிலாமற் ருனே
நிலை குலைய லாகி னேனே (மி)

அன்னந் தண்ணீரின்றி யானே
அல்லும் பகலும் வாடு றேனே
இன்னும் என் பிரிய கோனே
இங்கே வரக் கா ணேனே (மி)

சஞ் சலத் தால் நானே
தயங்கிட லாகி னேனே
வஞ்சிமுன் வருவாரோ தானே
மயஙகிட லாகி னேனே (மி)

[சகிகள் வருகிருர்கள்.]

நம்தேவி! ஒருவாருன முகத்தோடு வருந்திக்கொண்டே யிருக்கின்ருர்கள். அம்மா! என்ன உமக்கு சங்கடம் நேர்ந்தது எங்களிடம் அதைப் புகலுங்கள்! என்ன அம்மா! இப்படிவிழிக்கிறீர்களே!

தரு.

(நாச்சோகாரு)

ஏக்கமேனே ஏக்கமேனே
ஏக்கமேனே தேவி இப்படிக்
கெல்லாம் வருந் துதல்
பொல்லாங்காகும் புவிமீதே (ஏ)

சல்லாபக்காரி தலைநோய் கொண்டாயோ
உல்லாசக்காரி பிடித்தது பேயோ (ஏ)

மனதிற்கொண் டிருப்பதைக் கூறுவாய் தேவி
மங்கையே மனங்குன்றி வாடாதே தேவி
தினமு முருகிரு யெதற்கோ தான் தேவி
தெளியச் செய் விக்கவே தாரோம் சஞ் சீவி (ஏ)

சாவித்ரி:—எனக்கு யாதொரு பிணியுமில்லே! இன்று என் மனமாகப் பட்டது ஒருவாறுகவே யிருக்கின்றது.

சகிகள்:—அப்படியா! சரி! நாங்கள் தம் அருகிலில்லாததே இதற்கு காரணம். தேவி! தாம் முன்பு ஒருதரம் இனிமையாகப் பாடினீரே அந்த பாட்டைப்பாடுமே! அதுமிக்க இனிமையாகவே யிருந்தது. அந்தப்பாட்டு எனக்கு ஞாபகமில்லே. இப்போது, அதை நீரே ஞாபகப்படுத்தும்.

சாவித்ரி:—இதென்னடி உனக்கெந்த வேளையிலும் பாட்டுதானு! போடி போ! இந்தசமயம் அந்த பாட்டின்மீது மனம் செல்ல வில்லே.

சகிகள்:—தேவி! இம்முறை மாத்திரம் பாடும்.

சாவித்ரி:—இப்போது அதைப் பாடவேமுடியாது

சகிகள்:—தேவி! என் ஆவலைத் தீர்ப்பது தம் கடமையல்லவா! மறுவிசை கேட்கவே மாட்டேன். நான் உம் உயிர்ப்பாங்கி யல்லவா !

சாவித்ரி:—ஆம்! அப்படியே பாடுகிறேன்

தரு

பார்ஸி மெட்.

அச்சா மோரி லாகீஸ கேனுவா லகேனுவா
  கேனுவா ஆ லகேனுவா
தியேதில் தார தொஹை ஸாரே ஜவானு
  அரே வஹாவாஜி வஹாவாஜி
  வஹாவாஜி வா (அ)

சம்பால நைநா ஐமொரி ஷாஜன்
  லாச்சார்மை லாச்சார்மை
  லாச்சார்மை லாச்சா (அ)

சகிவாயோ பாடுகின்றது மனம் எங்கனே அலேகிறது இப்போது பாடவேண்டுமெனின் கூடவில்லே என்ன செய்வதிதற்கு.

சகி:—எங்கு அலையப்போகிறது நந்தவனத்திற் கண்ட புருடரிடத் திலிருக்கலாம்.

சாவித்ரி:—உனக்கு எப்போது பார்த்தாலும், விளையாட்டே தான் இனி இவ்விதமாக விளையாடினுல் எனக்குக் கோபம் வரும் ஜாக்கிரதை!

[ மாலவி வருகிருள்

அம்மணி நமஸ்காரம் அமர்வீர் என்னை யழைத்தால் நான் வரமாட்டேனு!

மாலவி:—கண்ணே நீயும்உட்கார் ஏன் ஒருவாருய் உன்முகம் வாடி யிருக்கின்றதே! காரணம் யாது! உனக்கு வேண்டியதென்ன நீ என்னசெய்து கொண்டிருந்தாய்.

சகி:—தேவி! இப்போது பாடிக்கொண்டிருந்தார்கள் அது சமயம் தாங்கள் வந்தீர்.

மாலவி:—அதனுல் இடையூறுவிளைந்ததென எக்கமோ!

சாவித்ரி:—அப்படிக் கொன்றுமில்லை நான் எப்போதும்போல் தானிருக்கிறேன்

சகி:—தேவி! அகத்திலழகு முகத்தில் தெரிகிறதே! உண்மையைத் தெரிவித்துவிடுமே!

சாவித்ரி:—என்னடி அது, நீ ரொம்ப கெட்டவளாக யிருக்கிருயே! பத்திரம் வாயை மூடிக்கொண்டிரு!

மாலவி - தரு.

(ப்யாரி மீடேஜி)

மதிமுகம் வாடின காரணமென்ன
மகளே உண்மையை உரைப்பாய்
மதி மயங்காதே இனி தயங்காதே
விதி தியங்காதே மதி (மு)

இந்த சகிகளின் தொல்லையோ
என்ன சொல் சொல் சொல்

ஏனோ மல் மல் மல்
மனங் கல் கல் கல் மதி (மு)

அன்னமும் ஆடையும் துறந்தாய்
பின்னலு மலரியும் மறந்தாய்
பெண்ணே என் என் என்
வாட்டந் தான் தான் தான்
தீர்ப்பேன் நான் நான் நான் மதி (மு)

சாவித்ரி:—நான் எப்போது மிருக்கிறுப் போலதா னிருக்கிறேன். என்ன அம்மா அப்படிக் கேட்கிறீரே

மாலவி:—நான் இதுகாறுமப்படிக் கேட்டேனு! உன் நிலைமையை யறிந்தே யிப்படி கேட்டேன்! உண்மையைச்சொல். ஏன் பேசாமலிருக்கிறுய்.

சகி:—அம்மா! நம் சாவித்ரி தேவிக்கு எவ்வனப்பருவம் வந்ததின் நிமித்யம் தக்கவரனைத்தேடி மணம் புரிவித்தமேல நலம்.

மாலவி:—எனக்குமதே யோசனைதான், அதுபற்றியே மனோபாவத்தை யறியவந்தேன் கண்ணே! உன் உள்ளக்கருத்தை வெளியிடு பார்ப்போம்.

சாவித்ரி:—என்னடி நீ, ஏது ரொம்பகெட்டவளாயிருக்கிறுயே உன்னையார் கேட்டது, நீ அந்த மூலையிற் போயிரு! அம்மா இந்த சகி என்னேரம் பார்த்தாலும் இப்படி தான் குறும்புசெய்கிறுளம்மா.

மாலவி:—கண்ணே சகி உனக்கு விவாகப் பேச்செடுத்ததும் உன்முகம் வாடினதே!

சகிகள்:—அம்மா! தேவி சொல்லார்கள் நாங்கள் ஓர் நாள் நந்தவனம் சென்றிருந்தபோது அங்கனம் யாரோ இரண்டுபேர் அவ்வழியாக வந்தார்கள் அவர்களி லொருவர்மீது மனம்வைத்ததாகத் தெரிகிறது; அதுமுதல் மனதை வேறுபடுத்தி யாரிடம் சொல்லாமலும்; நாங்கள் யாதென்று கேட்டால் எங்களைக்கடுமையாயும் பேசுகிறுர்கள்.

மாலவி:—என் கண்ணே! இதுவாஸ்தவந்தானே!

சாவித்ரி:—என்ன அம்மா! அவர்கள் பேச்சை எடுத்துக்கொள்கிறீர் களே.

சகி:—அம்மா! தேவிவாயை கொண்டே தெரிந்துகொள்ளும் விடா தேயும்; தேவி! உன் அபிப்பிராயத்தை ஒளியாமல் கூறிவிடும் ஏன் மௌனஞ் சாதிக்கிறீர்! மனநோயை விருத்திப் படுத்தா தீர்! அதனால் மிக்ககஷ்டமே யடைகுவீர் நீர் சொல்வீராகில் உம் இஷ்டப்படிக்கு நடத்துவார்கள்.

சாவித்ரி:—போடி எனக்குத் தெரியும், நீ புத்திசொல்கிறாயோ! பத் திரம் வாயைமூடு.

மாலவி:—உன் தாயிடம்புகல என்ன லஜ்ஜை.

தரு

(ஆயமுஜ தரதேஜி)

மாலவி: என்மகளே உன்மனதி லிருப்பதையோது

சாவித்ரி: அன்னையே சொல்ல நாணமாயிருக்குதே

மாலவி: ஒன்றுக்கும் நீ லஜ்ஜைப்படாதே

சாவித்ரி, என்னென்று நானுன்னிடஞ் சொல்லுவேன்

கஜல்

முன்பெனைப் பூங்காவில் பூதம்துரத்த அதனைக்கொன்று
என்னைக் காத்தமகிபன் மேல்மனமானேனின்று

மாலவி - கஜல்.

கன்னியே நீகோறின கணவனையே மணஞ்செய்விக்கிறேன்
இன்னுமேனுங்குன்றும விருப்பா யினிவாகத்தான்

தரு.

சென்றிடு அந்தப்புரம் கண்மணி (எ)

[அஸ்வபதி வருகிறார்.]

மாலவி:—நமஸ்காரம் பிராணபதி! அமருங்கள்; என்ன மகராஜ் நம் சாவித்ரிக்கோ எவ்வனமேலிட்டது. இன்னுமவளுக்கு விவாகஞ் செய்யாவிட்டா லென்ன செய்வது நெருப்பை மடி யில் கட்டிக்கொண்டிருப்பது போல் வைத்திருக்கின்றேனே

மீறிடில் நாம் பழிக்குதான் ஆளாகவேண்டும். ஆகையால் அவளுக்குத் தக்கவரனைத் தேடி விவாகத்தை முடிப்பீராக.

**அஸ்வபதி:**—அதே எனக்குங் கவலை! நம் பெண்ணின் அழகு, கல்வி, பொறுமை முதலிய சகல நற்குணத்திற்கேற்ற புருடர் யாருமில்லையென ஒவவொரு தேச ராஜகுமாரர்களும் ஏற்றவர்களல்லவென்று மொழிகிறார்களாம் இதற்கென்ன செய்வேன்! சாவித்ரியை யழை.

[நாரதர் வருகிறார்]

**தரு**

**(ராஜராஜராஜர்போற்றும்)**

ஸ்ரீ கைலாஸ சிற் சபேஸ ஸ்ரீ கடாக்ஷ சங்கர
ஸ்ரீ குண நிதேசர்வேஸ சின்மயா கங்காதர
சிவம் சிவம் பஞ்சாக்ஷரம் சிவானந்தம் பராபரம்
பவம் பிதம் ஹதாஹதம் பரானந்தம் மஹேஸ்வரம்
பார்வதி மனோஹரம் பசுபதி உமாபதி
சீர்பெரு நாராயண சுவாமி யானும் பதங்கதி(ஸ்ரீ)

**அஸ்வபதி - மாலவி.**

**தரு**

**(ஆவ மில ஜாலஷதி)**

பாதம் பணிந்தோம் பாதுகாரும் ஐயா - பத்ம (பா)
நாதா ரக்ஷிப்பீ ரெங்களை
வேதநாயகா - காரும் மெய்யா

**நாரதர் - தரு.**

வேந்தே நீங்க ளென்றும் வாழியே (பா)

**அஸ்வபதி:**—தாங்கள் எழுந்தருளவேண்டும்.

**நாரதர்:**—அஸ்வபதி மன்ன ஆலோசனையி லிருக்கின்றீர்கள்.

**அஸ்வபதி:**—சுவாமி! நம் சாவித்ரிக்கு தக்கவரன் கிடைப்பது துர்லபமா யிருக்கின்றது. அதைப்பற்றி தான் சிந்திக்கிறோம்.

**நாரதர்:**—ஏன்! எத்தனையோ ராஜாக்களிருக்கிறார்களே, அவர்களில் யாரும் லபிக்கவில்லையா.

**அஸ்வபதி:**—ஒவ்வொருவரும் தாம் சாவித்ரிக்குத் தக்கவரன் அல்லவென்று நிராகரித்து விடுகிறார்கள், என்செய்வது இதைப் பற்றி தாங்கள்தான் யோசிக்கவேண்டியது.

**நாரதர்:**—எனக்கென்ன தெரியும்.

**அஸ்வபதி:**—திரிலோக சஞ்சாரியாகிய தமக்குத் தெரியாததொன்றுண்டோ!

**நாரதர்:**—சரி, சாவித்ரியின் அபீஷ்டம் தெரிந்துகொண்டீர்களா!

**அஸ்வபதி:**—அதற்காகவே அழைத்துவரச் செய்திருக்கிறேன். தாங்களும் விஜயம்புரிந்தீர்.

[சாவித்ரி வருகிறாள்]

தரு.

(கோபங்கொள்ளவேண்டாம்)

தாளடி பணிந்தேனே தபோதனரே (தா)

தவத்தினிற் பிறந்தேன் தையலும் சிறந்தேன்
கவலையால் மதி துறந்தேன் கருணாகரா (தா)

**நாரதர்:**—தீர்க்க சுமங்கலீபவா!

[சாவித்ரி தன் தாய்தந்தையரை வணங்குகிறாள்.]

**சாவித்ரி:**—வந்தனம் தாய் தந்தையரே என்னையழைத்த காரணம் அருள் புரியவேண்டும்.

அஸ்வபதி - தரு.

(ஷாஹேவாலா தப்பாரா)

உனக்கு மணம்செய நானழைத்தேன்
உளத்தினிலிருப்பதைக் கூறுவாய்தான்
நினைத்ததை முடிக்கிறேன் சுகமுடன்நான்
நீ யுரையன் நாயகனை
சேயிழையே தாயகமே (உ)

கண்ணே! உனக்குத் தக்க புருடனைத் தேடிப் பார்த்தும் கிட்டுவது மகா கடினமாகயிருக்கிறது. இதைப்பற்றி நான் மிகவும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கையில் இந்த மகாத்மா வந்தார், அவரும் விரும்புகிறார். உன் அபிப்பிராயத்தைத் தெரிவி!

மாலவி - தரு

பத்துமாதமும் நான் சுமந்து
பாவையே ஈன்றேனுனைக் கனிந்து
உத்திமியே நீ மனமகிழ்ந்து
உன்மனதிற் கொண்டிருப்ப
தென்ன அதை இன்றுரைப்பாய் (ஐ)

குழந்தாய்! நாணமுறுமற் கூறு! உன்தந்தை கேட்டதற்கு மறுக்காதே!

**நாரதர்:**-என்னெதிரிற் கூற லஜ்ஜைப்படுகிறுள் போலும்தெரிகிறது

தரு

இந்த சமயமேதும்முடி யாது
இங்குமே தங்கி யிருக்கொ ணுது
சிந்தையி லொருவனை நினைங் கிப்போது
சீர் குலேந்தாள் நேரிழையும்
யார் அவரெ கூறிடச்சொல் (இ)

அஸ்வதி! நானிருக்கும்போது சொல்ல நாணமுறுகிறுள் நான் செல்கிறேன். பிறகு நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள்.

சாவித்ரி - தரு.

என்னை மன்னித்திடுங் குருநீர் தான்
ஏந்திழை பூ வனம் போயிருந்தேன்
மன்னனும் சத்திய வந்தருந் தான்
மடிக்கவந்த கடும்பூதத்தை
அடித்ததா லவர்க் குடனும்பட்டேன்
அத்தருணம் நானவரைக் கண்டு
அயர்ந்தோரை எழுப்பியேயிப் பெண்டு
சத்திய மிருவரும் செய்து கொண்டு
தரணிதனில் பிரிந்திடாம
லிருப்போமென உறுதி செய்தோம்
எவர் மீது மென்மனம் செல்லாது
ஏன் வாது இப்போது
என் மனம் போல் முடிப்பீர் (எ)

நாரதர்:—சத்தியவந்தனையா கோறினை !

சாவித்ரி:—ஆம் சுவாமி !

அஸ்வபதி:—சுவாமி ! ஏன் அவ்விதம் கூறுகிறீரே.

நாரதர் - தரு.

(எகியாமேதன் மேதன்)

நல்லவரன் தனையேநாடினள் சாவித்ரி
சொல்லிலோ அரிச்சந்திரனுகும்
வில்லிலோ ஸ்ரீராமச்சந்த்ரனுகும்
நல்லவன்
தான் பராக்ரம சாலி
தைரிய புத்தி சாலி
தந்தைக் கதிஷ்ட சாலி
தாரணி ஜய சாலி
தாஷ்டீகன் குண சாலி
தாண்டீகனு யிரநாவு தான் படைத்த சேஷனுலும்
ரெண்டாயிரங் கைப் படைத்த
பானும் பனல் மென் மேலும்
அண்டரானும்வனிலையை
அறிந்திலார் ஒருக் கானும் (உ)

அப்படிப்பட்ட புண்ணியவானை உன் புத்ரி காதலுற்றதற் களிப்படைந்தேன்! ஆனல், சொல்லகாவெழவில்லை.

அஸ்வபதி:—சுவாமி! ஆனல் என்று கூறிவிட்டு மௌனஞ் சாதிக்கின்றீரே! என்ன காரணம்.

நாரதர்:—அந்த சத்யவந்தனுடைய தாய்தந்தையர் தற்சமயம் சத்துருவினல் நாட்டையிழந்தும் தங்கள் கண்களையு மிழந்தும் காட்டில் சஞ்சரிக்கிறார்கள் ! அங்கு சத்தியவந்தன் காய் கனிகளுண்ணக் கொடுத்து ஆதரித்து வருகின்றான்.

அஸ்வபுதி;—இதானே ! அதற்கென்ன ! இங்கனம் வரவழைத்து என் அரசை அந்த சத்யவந்தனுக் களித்து, சகலருடனும் சந்தோஷமாக யிருக்கிறேன்.

நாரதர்:—ஆம், அப்படி செய்வது நலந்தான் ஆனலும் மற்றொன்றிருக்கிறது, அது என்னை பாதிக்கின்றது.

அஸ்வபதி;—அதென்ன சுவாமி விசிதமாய்த் தெரிவியுமே.

நாரதர் - தரு.

(சையாடலகி தகினதிரா)

அழகனவனே தக்க வரன்தான் ஆஹா
ஆனாலொருசந்தேகம் கூறுவேன் (அ)

மொழியிலோ அரிச்சந்த்ரன் மோகனசுந்தரன்
பழியிலான் ஸ்ரீராமன் போல் பலாட்டியன்
மிக்க தந்தரன் தேடினுங்கிட்டாத தேவேந்தரரூபன்()

ஈடெங்கினு மேயில்லை ஈகையோனவன் பிரதாபன்
புண்யவசத்தினாலே பூவையும் கோறினள்
கொண்டால் தன்யனாகுவை
கோவேயவன் மதவேன் (அ)

அஷ்டலக்ஷ்மி விலாசம் பொருந்திய அவனது முகத்தைக் கண்டாலே போதும், உன்புத்திரி யவனை வரித்தது நீ முன்செய்த புண்யவசமே தான்! ஆனால் மற்றொன்று என்மனதை பாதிக்கின்றது, மொழிவோமெனின் என் நாவெழவில்லை என்ன செய்வேன் இந்த கையவேளையில்தானா நான் வரவேண்டும். இதென்ன கஷ்டம் வேந்தே யான் செல்கின்றேன் நாணிங்கிருந்தா லேதேனும் சொல்லவேண்டிவரும்.

அஸ்வபதி;—சுவாமின்! நீரே இவ்விதம் மௌனஞ் சாதித்தாலெப்படி! அடியேனுக்கு தயை புரிந்து விபரமாயதைக் கூறுவீராகில் என்மனம் திருப்தியாகும்; தாங்கள் யாதுந்தெரிவியாமலிருந்திருப்பீர்களே யாகில் இப்படி என்னை பாதிக்க இடந்தராது ஆகையால் கருணை புரியவேண்டும் தயாநிதி.

நாரதர்:—அஸ்வபதி அவனுக்கு அற்பாயுள் இன்று முதல் முன்னூற்றறுபது நாளிருக்கிறது அவன் வாழ் நாள்.

சாவித்ரி:—சிவ சிவ.

அஸ்வபதி - தரு.

(மெத்த நகைத்த.)

கண்ணிருந்தும் கிணற்றினில் விழுவாவார்போல்
காலமுடிவோனைக் கோறினைப்பார்மேல்
எண்ணங்கொண்டுநீயும் ஏங்காதே பலகால்

இன்றேவிடு - நன்றே தொடு
மன்னன்வேறு நீ பண்ணிடு (க)

வத்ஸ்யா! நீ கொண்டதை மற! அதைச் சிந்தியாதே எனக்கு அநேக காலம் புத்திரசந்தானமில்லாயல் வருந்தியிருக்கும் சமயம் இந்த மகாமுனிவரருளாலும் அந்த சாக்ஷாத் சாவித்ரி தேவி திருவருளாலும் நீ உற்பவித்தனை! அத்தகைய பெண் மணியாகிய உனக்குத்தக்க வரனின்றி, அற்பாயுளுள்ளவனை கருதலாகுமா!

சாவித்ரி - தரு.

அன்றெழுதிட்டவினை வீணாய் போமோ
அரிவைக்கியம்புதல் நலமாமோ
இன்றென்ன சொன்னாலு மென்புத்திக்கேற்காது
அன்றே குறித்திட்டபடி
இன்றே முடித்திடுவீர்நொடி (அ)

பிதா! நான் எவரைக் குறிப்பிட்டேனோ! அவரை விடுத்து வேறொருவரை எண்ணினால் என் கற்புக்குப் பழுதாகும், உங்கட்கதனால் நலமாகும்; மறுத்திடில் அழிவாகும் பழியும் நேரும்.

மாலவி - தரு.

சீனியும் வெண்ணெயுங் கலந்துமே யூட்டலாம்
சிக்கிவிக்கியே கொண்டாலென்ன செய்யலாம்
மானேயுன்னையொரு மகிபனுக் கேதந்து
மனமார யிருந்தோம் நீயே
தினங்குன்றிட விடுத் தாயே (ஈ)

நீ மனதிற்றுனே நினைத்தனை! சகலருமறிய மணம்புரியவில்லையே! அவைகளெல்லாம் பயனாகுமா! கண்மணி பூர்ணவயதுள்ள ஓர் மன்னனைத்தேடி மணம்புரிவிக்கிறோம் நீ கொண்டதை விடு.

சாவித்ரி - தரு

அசமஞ்சனைக்கட்டி மகிழ்வதைப்பார்க்கிலும்
இசைந்தவனைக்கட்டி தாலியறுக்கலாம்
எல்லா மறிந்தோர்க் கிதுகுறைவன்றோ

இத்தரணியில் மற்றோர்களை
நத்திடேனே பெற்றோர்களே (அ)

அம்மா! நான் எப்போது என் மனதில் நினைத்து விட்டேனே! அப்போதே மணமானதுபோலாகும், ஆதலின் என்கற்பு பழுதாகாவண்ணம் அவருக்கே விவாகம் புரிவியுங்கள் இல்லையேல், ஆவிதரியேன்.

**மாலவி:**—கண்மணி இந்தப்பிடிவாதம் விடு! இதென்ன இப்படி மறுதலிக்கின்றாயே! எதிர்த்து வசனிக்கப் போகுமா!

**சாவித்ரி:**—அம்மா! என்னைக் கேட்டதற்கியம்பினேன் இனி என் மனம் திரும்பாது!

**நாரதர்:**—சாவித்ரி தேவி! தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை யென்பதறிந்தும், மறுதலிப்பதழகல்ல.

**சாவித்ரி:**—சுவாமி! தங்களை நமஸ்கரித்தபோது, தீர்க்கசுமங்கலி பவா என்றீர், அந்த வார்த்தை பொய்க்குமா! அப்படி பொய்த்தால் தாங்கள் பிரம்மபுத்திரவீரா! நன்குணரும் தீனதயாளா! நீங்களனைவரும் சேர்ந்துகொண்டு என்மனதைக்கெடுக்காதீர்! கெடுக்கினும் பயனில்லை.

**நாரதர்:**—அப்படியா! உன்மனோதிடத்திற்கு மெச்சினேன் மன்னா! நீயே தன்யன்! மிக்க புண்யன்! உன்புத்ரி வயதிற்சிறியவளாகயிருப்பினும், புத்தியிற் பெரியவளென்று நினை! அவளிஷ்டம்போலந்த சத்தியவந்தனுக்கே மணஞ் செய்துவிடு.

ஸ்லோகம்.

ஹரிநாபி ஹரேணபி ப்ரம்மநாபிசுரே ரிதா
லலாடலிகிதாரே

அவரவர் வினைப்படியாகிறது என்மேற் பழிபோட்டு விட்டனள் இனி என்னாலான உதவிசெய்து தான் தீரவேண்டியது அம்மா சாவித்ரி.

தரு.

(ஸாமுல சகிப்ரோ)

மனமதுபோல மணஞ்செய்து கொள்
மாதேசாவித்ரி நீயே (ம)

குணத்தின்மிக்க குலமங்கையே
குவலயத்தின் திருநங்கையே (மன)

உனது மணாளன் ஓராண்டில்
உயிரகலும் தருணம்நீயே
மனவுறுதியாய் கௌரிநோன்பினை யனுஷ்டித்தால்
மறலியணுகான் (மன)

அம்மணி சாவித்திரி நீயொன்றுக்கும் அஞ்சாதே எனது வாக்கினால் உன்னை ஆசீர்வதித்தது பொய்யாகாது, நீ தீர்க்க சுபமங்கிலிய ஸ்திரீயாயிருப்பாய் அதற்காக யான் உனக்கு கௌரிநோன்பு அனுஷ்டிக்கும் மந்திரம் உபதேசம் செய்கின்றேன் அருகில் வருவாயம்மா.

சாவித்திரி:—மஹாபாக்கியம் சுவாமி நாரகர் சாவித்திரியம்மனுக்கு உபதேசஞ்செய்வது

நாரதர்:—அம்மணி கவனித்தனையா!

சாவித்திரி:—கவனித்தேன் சுவாமி!

நாரதர்:—அஸ்வபதி இனி உனது குமாரத்தியை வனத்திற்கழைத்துச்சென்று சத்தியவந்தனுக்கு விவாகஞ் செய்துவிடுவோம் வருவாய்.

அஸ்வபதி:—அப்படியே மஹாசபாக்கியம் சுவாமி!

[அஸ்வபதி தனது பத்தினி சஹிதம் மந்திரி பிரதானியருடனே சாவித்திரியை அழைத்துக்கொண்டு வனத்திற்கு வருவது.]

## 7—வது சீன் வனம்.

சத்யவந்தன்:—மித்ரா யான் எனது பெற்றோர்க்கு காய்கனி கிழங்குகள் கொண்டுவருகிறேன். நீ இங்ஙனமே காவலிருப்பாய்.

(நாரதருடன் அஸ்வபதி தம்பதி சஹிதமாய் வருதல்.)

நாரதர்:—அஸ்வபதி இதோ பார்த்தனையா துயுமத்சேனன் தனது பத்தினியுடன் நேத்திரமிழந்து பரதவிக்கின்றான்.

அஸ்வபதி:ஆ! ஹா! என்ன ஆச்சரியம் அரசே!

துயுமத்சேனன்:—ஆரையா எனை அன்புடன் விசாரிப்பது.

அஸ்வபதி:—அரசே! யான் மத்ராபுரியை பரிபாலனஞ்செய்யும் அஸ்வபதியாகும் தனது புத்ரியை உனது புத்ரனுக்கு மணஞ் செய்துவைப்பதற்காகவே இவ்வளவு தூரம்வந்தேன்.

துயுமத்சேனன்:—அஸ்வபதி மன்னா! பாவியாகிய கரகேதுவினால் இராஜரீகத்தையு மிழந்து அந்தகனாய் ஆரண்யத்தில் அலைந்து திரிகிறேனே எனது புத்திரனாகிய சத்தியவந்தனுக்கு உமது புத்திரியை மணஞ்செய்வதெனின் உமது மனதிசையுமா.

அஸ்வபதி:—அரசே! எனது புத்திரி உமது புத்ரனை மணஞ்செய்துக்கொள்வதன்றி மற்றவரை விரும்பேனென்கின்றாள் அவள் மனதின்படியே மணஞ்செய்து வருவோம்.

துயுமத்சேனன்:—சகி உமது இஷ்டத்தின்படியே செய்துக்கொள்வீர் சுமாலி வனத்தில் காய்கனி பறிக்கச்சென்ற சத்யவந்தனை சீக்கிரமாய் வரவழைத்துக்கொண்டு வருவாய்.

(சுமாலி சத்யவந்தனை அழைத்துக் கொண்டுவருவத்து)

சத்யவந்தன்:—இவர்கள் யார் இவர்களுடன் வந்திருக்கும் பெண் நாம் கானகத்தில் கண்ணுற்ற சாவித்திரியைப்போ லிருக்கின்றனவே, நல்லது அருகிற்சென்று விசாரிப்போம். பிதா நமஸ்கரிக்கின்றேன்.

துயுமத்சேனன்:—மைந்தா உனக்கு அஸ்வபதியின் புத்திரியை விவாகஞ்செய்வதற்காக அழைத்துக்கொண்டு வந்திருக்கின்றார் உனது இஷ்டமென்ன தெரிவிப்பாய்.

சத்தியவந்தன்:—பிதா தந்தைசொன்மிக்க மந்திரமில்லை யென்னுந் தன்மையாய் உமது வார்த்தையை தவறேன் உமது இஷ்டப்படியே நடக்கப்படும்

துயுமத்சேனன்:—அஸ்வபதி அரசே! உமது இஷ்டப்படியே விவாகத்தை நடத்துவீர்.

(சத்தியவந்தனுக்கும் சாவித்திரிக்கும் விவாகம், சதிபதி மணமாலே மாற்றிக்கொள்வது சாவித்திரியும்சத்தியவந்தனும் நாரதர்முதலான சகலரையும்பணிந்து ஆசிர்வாதம் பெறுவது.)

அஸ்வதி:—துயுமத்சேன மஹாராஜனே யான் எனது தேசத்திற்கு செல்கின்றேன் செலவருள்வீர்.

துயுமத்சேனன்:—அப்படியே சென்று வருவீர்கள்.

(சகலரும் போய்விடுவது)

சத்யவந்தன்:—நீ என்ன மூன்றுநாளாய் அன்னம் புசியாமலிருக்கின்றாயே.

சாவித்திரி:—பிராணபதி யான் ஓர் சுபகாரியத்தினுல் கௌரிவிரதமிருக்கின்றேன்.

சத்யவந்தன்:—பெண்ணே! யான் காட்டில்போய் பழதினுசுகள் பறித்துக்கொண்டுவருகின்றேன் நீ உனது மாமன் மாமிக்குத் துணையாயிருப்பாய்.

சாவித்திரி:—பிராணபதி யானும் உம்முடன் வருகின்றேன் தடை சொல்லாமல் அழைத்துக்கொண்டு செல்வீர்.

சத்தியவந்தன்-தரு.

கனிகள்பறித்து நான்வருவேன்
கண்ணிழந்த பெற்றோர்க்கு
நீயிங்ஙனம் வீற்றிருப்பாயேயான்
சென்று சீக்கிரம்வாரேன்

சாவித்திரி-தரு.

உன்னுடன் யானும்வருகிறேனுதா
என்னையும் அழைத்து ஏகுவீரினிதாய்

சத்யவந்தன்-தரு.

அவர் கண்ணிழந்த பசுபோலே
கலங்கிடுவார் புவிமேலே

சாவித்திரி-தரு.

மங்கிலியமணிந்த மணாளனைபிரிய
மனமும்வருமோ பிரியேனினிதாய்

சத்யவந்தன்-தரு.

சினத்தின்மிருகவனத்தில்
தனித்திருப்போர்க்குதுணையார்

சாவித்திரி-தரு.

என்னசொன்னுலு முன்னுடன்வருவே
என்னையும் உன்னுடனே யழைத்தேகும்

சாவித்திரி:—பிராணபதி இன்றையதினமாத்திரம் யான் உம்முடனே இருப்பேன்.

சத்யவந்தன்:—சரி! அப்படியானுல் உனது மாமன் மாமியிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு வருவாய்.

(சாவித்திரி தனது மாமன் மாமியிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு புருஷனுடன் காட்டுக்கு போவது.)

8-வது சீன்.—எமலோகம்.

வீரப்ரதாப தூதர்களே அடா அடா அடா பாரிலுள்ள பாபியை வதைக்கும் பக்ஷமுள்ள தூதர் இக்ஷணமே உஷார் உஷார் உஷார்.

தூதர் :—அண்டரண்ட பகிரண்ட மெங்கும் கிடுகிடு வென் றதிரும் புகழ்பெற்ற எமதர்ம பூபதி வந்தனம்.

எமன் :—கல்யாண்! சித்ரபுத்திரனை சீக்கிரமாய் வரவழைப்பாய்.

தூதர்கள் :—இதோ வருகிறுர் பிரபு.

சித்திரபுத்திரன் :—மஹாராஜ ராஜராஜபூஜித எமராஜனே வந்தனம்

எமன் :—கல்யாண்! சித்ராபுத்ரா ஆயுள் முடிந்து எமலோகத்தில் வந்திருக்கும் ஜீவர்களின் பாபபுண்ணிய மனைத்தும் விபரமாய்ச சொல்லிக்கொண்டு வருவாய்.

சித்திராபுத்திரன் :—சரி அவ்விதமே சொல்லிக் கொண்டு வருகிறேன் கவனிப்பீர் எமபுரத்தரசே.

சித்திராபுத்திரன் - தரு.

கொஞ்சமுமேனும் நெஞ்சிரங்கா
கொலைகளவு செய்தபாபி
வஞ்சகரிவர்கள் பொல்லா
வம்பர்களென்றறிகுவீர்.

எமன்:—அடா தூதர்களே இந்த வஞ்சக நெஞ்சகராகிய வம்பர்களை அக்கினியில் சுட்டு சித்ரவதை செய்வீர்.

சித்ராபுத்திரன்-தரு.

குடும்பகலகஞ்செய்த குரூரதுஷ்டரிவர்
அடுத்தோரைக்கெடுத்த அநியாயபாவியிவர்

எமன்:—அடா தூதர்களே குடும்பகலகஞ்செய்த துஷ்டர்களை செக்கிலிட்டு சித்ரவதைசெய்து சதையைச் சக்கையாய் அறுத்து நெருப்பிற் போடுவீர்கள்.

சித்திராபுத்திரன்-தரு

சாராயத்தைக்குடித்து
சர்ஜ்ஜனரையடித்த
சண்டாளனிவன் பாரீர்
சோரத்தனமாக வெகுபேரை இம்சித்த
துஷ்டனிவன் பாரீர்

எமன்:—அடா தூதர்களே சாராயத்தைக்குடித்த வெறியினால் உத்தமரைப் பலவிதமாய் இகழ்ந்து பேசி யடித்த சண்டாளர்களை சித்ரவதைசெய்து எழுகையுருக்கி அவன் வாயிலூற்றி குடிக்கச் செய்வீர்கள்.

சித்ராபுத்ரன்-தரு.

பாபஞ்செய்யா உத்தமன்
பாரில்வாழும் நாளையில்
கோபமில்லா சாந்தகுணங்
கொண்டவ னிவனையா

எமன்:—இந்த உத்தமனை துன்பஞ்செய்யாமல் சொர்க்கபதவிக்கு அனுப்பிவிடுவீர்.

சித்ராபுத்ரன் விருத்தம்.

சத்தியந் தவறிடாமல்
தர்மசிந்தையை வகித்து
அத்தன்மால் பத்திசெய்து
அவனியில் வாழ்ந்திருந்த

உத்தமனெனப்புகழ்ந்து
உலகத்தோர் மதிக்கப்பெற்ற
சத்தியவந்த ஞயுள்
சரியாக முடிந்ததையா.

வசனம்.

மஹாப்ரபு சத்தியவந்தன் ஆயுள் முடிந்துவிட்டது. சீக்கிரமாய் பிடித்துக்கொண்டு வரவேண்டியது.

எமன் - தரு.

செந்தலை பூதாவாடா
செவ்விழி கண்ணு வடா
இந்தக்ஷண சத்யவந்தனுயிர்
இழுத்துகொண்டு வாடா

வசனம்.

அடா தூதர்களே சீக்கிரமாய்ச்சென்று சத்யவந்தனுயிரை பிடித்துக்கொண்டு வருவீர்கள்.

தூதர்கள்:—அப்படியே மஹாபாக்கியம் அரசே.

நாரதர் பிரவேசம்.

தூதர்கள்:—சுவாமி நமஸ்காரம்

நாரதர்:—நாரதர் வந்தாரென உமது அரசனுக்கு தெரிவிப்பீர்கள்.

தூதர்கள்:—மஹாப்ரபு நாரதர் வந்திருக்கின்றார்.

எமன்:—வரச்சொல்வீர்.

நாரதர்:—எமதர்மராஜனே சுகீபவா!

எமன்:—என்னகாரணத்தை முன்னிட்டு வருகலானீர்.

நாரதர்:—விசேஷம் வேறொன்றுமில்லை, பூலோகத்தில் சத்தியவந்தனென்பவன் மஹா உத்தமன் அவனுடைய பத்தினியோ மஹா பதிவிரதை அவ்விருவரும் சிலகாலம் வாழ்ந்து புத்திர பாக்கியம் பெறவேண்டியிருப்பதால், அவனுடைய உயிரை இப்போது பிடிக்கவேண்டாம்.

எமன் - தரு.

பல்லவி.

என்னவார்த்தை சொன்னீர்
அன்யாயமாயொன்றுஞ் செய்வதில்லையேயான்

அநுபல்லவி.

முன்னாள்செய் வினையினால்
மூதுலகில் பிறந்து
பன்னும் வாழ்நாள் முடிந்தால்
பிரிந்துபோகுமோ உயிர்

சரணம்.

நான்முகன் விதித்த வாயுள்
தான் முடிந்து போனால்
ஏன்பிடிக்க கூடாது
இயம்புவீ ரித்ததியே
வான்புவியில் சத்யவந்தன்
மறைந்திருந்தாலும் சரி
வல்லமையாகப் பிடித்து
வருவேன் வருவேன் வருவேன். இன்று

எமன்:—ஆ! ஹா!! என்ன ஆச்சரியம் பிர்ம்மா சத்தியவந்தனுக்கு விதித்த வாழ்நாள் இன்றுடன் முடிந்துபோனது, இனி யார் தடைசொன்னாலுங் கேட்கமாட்டேன் நீர் இவ்வித விஷயத்தைக்குறித்து பேசவேண்டாம் உமதிருப்பிடம் செல்வீர்.

நாரதர்:—சரி! இவ்வளவுதானே இனி நாம் பிர்மலோகஞ்சென்று பிர்ம்மதேவனிடம் புகன்று சத்தியவந்தனுயிரை மீட்கவேண்டும்.

## 11—வது சீன் பிர்ம்மலோகம்.

நாரதர்:—பிதா நமஸ்கரிக்கின்றேன்.

பிர்மா:—கல்யாண் மைந்தா யாதுவிசேஷம்.

நாரதர்:—பிதா யானென்னவென் றெடுத்துரைப்பேன் பூலோகத்தில் சத்தியவந்தனென்னும் உத்தமன் மஹா பதிவிரதையாகிய சாவித்திரியுடனே வாழ்ந்திருக்கின்றான் அவனை இன்னும் சிலகாலம் பூலோகத்தில் வாழ்ந்திருக்கும்படியாக அனுக்கிரகம் புரியவேண்டும்.

பிர்ம்மா:—சரி! அப்படியே சதிபதி வெகுகாலம் இணைபிரியாமல் வாழ்ந்திருப்பார்கள்.

நாரதர்:—பிதா யானும் இவ்விதமே முன்பு ஆலோசியாமல் அந்த சாவித்திரி சதா மங்கிலியஸ்திரீயா யிருக்கவேண்டுமென ஆசீர்வதித்துவிட்டேன் தாங்களும் சதிபதியை வெகுகாலம் இணைபிரியா வாழ்ந்திருப்பார்களென அனுக்கிரகஞ்செய்தீர். நமது வாக்கும் பொய்யாது. ஆனால் இன்றோடு சததியவந்தன் ஆயுள் முடிவென்று எமதூதர் பிடித்து வரச்சென்றார்களே இதற்கென்னசெய்வது.

பிர்ம்மா:—சாவித்திரியின் பதிவிரதாலக்ஷத்தினால் தூதர் அருகில் நெருங்கமாட்டார். ஆனால் எமன் சம்மதியாமல் பிடித்துக்கொண்டுவந்தா லென்னசெய்வது ஆயினும் பெரிதல்ல, கருணா நீ இச்சமயம் எமன் மனதிலிருந்து அவன் மனதில் கருணையுண்டாகும்படி செய்து சத்தியவந்தனை உயிர்பெறச் செய்யவேண்டும்.

கருணாதேவி:—அப்படியே செய்கின்றேன் சுவாமி.

## 12—வது சீன் வனம்.

(சத்தியவந்தன் கட்டைவெட்ட மரத்தில் போகிறான் சாவித்திரி பின்பற்றி போகிறாள்)

சத்தியவந்தன்:—பெண்ணே என்ன இன்றைக்கு எனக்கு ஒர் மனமயக்கமுண்டாகி கைகால் சோர்ந்து உடல் நடுக்கமுண்டாகிறது ஆ! சாவித்திரி அதோபார்த்தனையா இருவர் விகாரரூபமாய் என்னைப் பிடிக்கவருகிறார்.

சாவித்திரி:—ஆ! ஐயோ எங்கு வருகிறார் கா‌ணோமே.

சத்யவந்தன்:—ஆ! சாவித்திரி அதோபார்.

சத்தியவந்தன்-தரு.

வருகுறார் இருவர் இவ்வனம்நாடி
வருகுறார் அதோ (வருகுறார்)

சரணம்.

கறுத்த நிறமுடனே கையிற்கயறுடனே
உறுத்து பார்த்துகொண்டு
உயிரை பிடிப்போமென்று (வருகுறார்)

**சாவித்திரி:**—ஐயோ யானென்செய்வேன் பிராணபதி.

[எமன் பிரவேசம்]

**சத்தியவந்தன்:**—பெண்ணே அவ்விருவர் போய்விட்டார் இதோ பார்த்தனையா இவன் யார்.

சரணம்.

பார்க்கபயமாகுதே பாசக்கயறுடனே
பதுவசிவருகிறானே பாராயடியென்கண்ணே (வருகுறார்)
ஏமனிவன்தானோ என்னசெய்குவனடி
பூமியாசையின்றோடே போச்சுதோ சாவித்திரி (வருகு)

[சத்தியவந்தன் பூமியில் வீழ்ந்துவிடுகிறான்]

**சாவித்திரி:**—ஐயோ இனியானென்செய்வேன் பிராணபதி.

சத்யவந்தன்-தரு.

மாதே-மாரடைக்குதடி-அடியென்கண்ணே (மாதே)

சரணம்.

வாதில்லாதுன்னையெவர்
வந்துகாத்திடுவாரோ (மாதே)
எந்தனைப்பெற்றோர்க்கு எவர்கள்போய் சொல்லுவார்
சிந்தைவருந்துதடி அடியென்கண்ணே (மாதே)

ஈசன்செயலிதோ ஒன்றுமறியேனே
பேசவரவில்லையே அடியென்கண்ணே (மாதே)

ஆவியும்சோருதே ஐயோயென்செய்குவேன்
நாவும்வரளுதடி அடியென்கண்ணே (மாதே)

[சத்தியவந்தன் உயிர் நீங்கியது]

சாவித்திரி:—ஆ! பிராணபதி யானென்செய்வேன் இனி எனக்கு யார் துணை.

சாவித்திரி-தரு.

மாண்டீரே என்மணாளா என்
மனதெவ்விதந் துணிவேன்
ஆண்டவன் விதிப்படியே—உன்
ஆவியிழந்திட்டீரே. (மாண்டீரே)

நாரதர் சொற்படியே—என்
நாதனை நானிழந்தேன்
ஆரென் துயர் தவிர்ப்பார்—என்
சீருங்குலேந்தைதயோ. (மாண்)

ஈஸா யெந்தன் மணாளன்
இறந்தவிதமறியேன்
ஆசைமறந்திட்டீரோ—எம
பாசத்திற் சிக்கினீரோ. (மாண்)

மஞ்சள் கருப்பாச்சுதே—எனக்கு
மருக்கொழுந்து வேம்பாச்சுதே
அஞ்சாதேயென்று சொல்லி—எனை
ஆதரிப்பா ராருமில்லை. (மாண்)

குங்குமம் யானிழந்தேன்—என்
கொற்றவரை யானிழந்தேன்
எங்கேகண்டு தேடுவேன்
எந்தன் மணாளனுயிர். (மாண்)

சாவித்திரி:—இனி தாமதஞ் செய்பலாகாது நமது பிராணனையும் விடுவது நலமாகும்.

சாவித்ரியம்மனுக்கு-எமதரிசனம்.

சாவித்ரி—தரு.

கோரரூபமாகவந்தீர்
ஆரையா நீர்கூறுவீரே

எமன்—தரு.

தீரனே தென்திசைக்கோன்

சாவித்ரி—தரு.

இங்கு வந்தகாரணமேன்

எமன்—தரு.

இவன் உயிரைகவரவந்தேன்

சாவித்ரி—தரு.

என்னையும் நீர் அழைத்தேகுவீர்

எமன்—தரு.

உன் ஆயுள்முடிந்தால் நீவா

சாவித்ரி:—ஐயோ மறைந்துவிட்டாரே இனி எங்குகண்டு தேடுவது.

## 12—வது சீன் காடு

எமன்:—ஆ! ஹா! என்ன ஆச்சரியம் சாவித்ரியெனும் மஹா பதி விரதை தனதுபுருஷனை பிரியாமல் என்னை தடுத்து பேசினுள் பார்த்தாயா யானென்ன எமதர்மனல்லவவோ?

சாவித்ரி:—சுவாமி மன்னிஸிமிகைஷதாரும்.

எமன்:—ஈதென்ன ஆச்சரியகாக்ஷி சாவித்ரி! என் பின்பற்றிவராதே உன் புருஷன் உயிரைத் தரமாட்டேன் யாதேனும் வேறு வரங்கேள் தருகுறேன்.

சாவித்ரி—தரு

மாமன்மாமி கண்தெரிய
மரலியே வரம்தருவீர்

எமன்:—அப்படியே தந்தேன் பெற்றுக்கொண்டு செல்.

சாவித்ரி:—ஐயோ மரைந்து விட்டாரே

13-வது ஸீன்.—மலைச்சாரல்.

எமன்:—சபாஷ் சாவித்ரிக்கு வரத்தைக் கொடுத்துவிட்டு மறைந்தோடிவந்துவிட்டோம் இனி அவள் நம்மைக்காணமாட்டாள்.

சாவித்ரி:—தருமபூபதி மணாளன் உயிரைத்தருவீர்.

எமன்:—ஆ! சாவித்ரி நீயே பதிவிரதை உன் மணாளன் உயிர் தவிர வேறு வரங்கேள் தருகுரேன்.

மாமன்மாமியும் வாழ்ந்தராஜ்யத்தை
மாபாவிகஜகேது அபகரித்தானையா
எமபுரத்தரசே எமதுராஜ்ஜியம்
எனதுமாமனுக்கே தந்திடச்செய்யும்.

எமன்:—அப்படியே கொடுத்தேன் சீக்கிரமாய்ச்செல்.

சாவித்ரி:—ஆ எமதர்மன் மறைந்துபோய் விட்டாரே.

13—வது ஸீன் அக்கினி ஆறு.

எமன்:—சபாஷ் சாவித்ரி இந்த அக்கினி ஆற்றை தாண்டிவரமுடியாது இனிநாம் செல்வோம்.

சாவித்ரி:—எமபுரத்தரசே! மங்கிலியபிக்ஷை தாரும்.

எமன்:—ஆ! ஆச்சரியமாயிருக்கின்றதே அக்கினி ஆற்றை எவ்விதமாய் தாண்டிவந்தாய் நல்லது உன்மணாளன் உயிர்தவிர மற்ற யாதேனும் வரங்கேள் தருகுரேன்.

சாவித்ரி:—எமபுரத்தரசே உமது கருணை சுவாமி எனக்கு பின்னால் என்பேர்சொல்வதற்கு ஓர் புத்திர பாக்கியம் வேண்டும்.

எமன்:—அப்படியே உன்சந்ததி பெருகும்படியாய் புத்திரபாக்கிய வரங்கொடுத்தேன் உன்னிருப்பிடம் போவாய்.

சாவித்ரி:—ஆ! எமன் மறைந்துவிட்டாரே.

## 14—வது சீன் எமலோகம்.

எமன்:—அடா தூதர்களே கோட்டைக்கதவை மூடிவைப்பீர்கள் யார்வந்தாலும் திறக்கக்கூடாது.

தூதர்:—அப்படியே மஹா பாக்கியம்.

{ சாவித்ரி வருதல் தூதர் ஓடிப்போவது தகவுதிறந்து எமன் வருவது.

எமன்:—அம்மணி மறுபடியும் ஏன் வந்தாய்.

சாவித்ரி:—சுவாமி எனக்கு புத்திரபாக்கியந் தந்தீரே புருஷனில்லாமல் எப்படி பிள்ளைபெறுவது யான்பதிவிரதையென்று தமது வாக்கிலும் வந்ததே.

எமன்:—ஆ! என்ன ஆச்சரியம் அம்மா சாவித்ரி நீ மஹாபதிவிரதை! உனதுமணாளனை உயிர் பெற்றெழுந்திருக்கச் செய்கின்றேன். இனி நீ உனது புருஷனுடன் தனந்தான்ய பசுபுத்ர லாபத்துடனே வாழ்ந்திருப்பாய். ஆனால் பதிவிரதாலக்ஷணத்தை எனது மனையாருக்கு போதித்தருளல்வேண்டும்.

சாவித்ரி:—அப்படியே மஹா பாக்கியம் சுவாமி.

சாவித்ரி—நொண்டிச்சிந்து.

அம்மணிசொல்வேன்கேளாய்-இந்த-அவனியின்பெண்களின் கற்புநிலைமை என்னால் தெரிந்தவரை-உமக்கு-எடுத்துரைப்பேனம் மாகவனிப்பீர் பெண்களாய்ப் பிறந்தோர்கள்- தமது- பெற்றோர்க்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் சாஸ்திரபுராணங்களை-கற்று-சத்திய வழிபிசகாமல் நடக்கவேண்டும் பருவதிசையடைந்தபின்பு - பரபுருஷர் - பக்ஷமாய்பேசினாலும் காணலாகாது தேவர்கள்சாக்ஷியாக மணந்தவனை -ஆவலுடன்பூஜித்து வாழவேண்டும் இதுதான் பதிவிரதை-மார்க்க-இலக்ஷணமம்மா. என்தாயே எந்தன்மணாளனுடனே பாலும்-எசியேயபூவுலகில் வீர்ழ்ந்திருக்க அனுக்கிரகஞ்செய்யம்மா - உந்தன்-அடிமலர்பணிந்து யான்தொழுதேன். (அம்மணி)

வேறு - சிந்து.

தாயேகேட்டருளும்-இந்தத் தாரணியிற்கற்புநிலை சீருடன்
தானே தெரிந்தவரையிலும் நான்-உரைப்பேன்-தேவியரே பெண்க
ளாவலுடனே பெற்றோர்களாற் கல்வி-பயின்று - பெருமையாகவே
தான் பருவமானபின் ஆடவரைக்கண்டால்-உடனே-அச்சம்நாணம்
மடம்பயிர்ப்பெச்சியகற்றி அடங்கிக்கணவனுடன்-வாழ்ந்து-அன்பா
யிருக்கவேண்டும் தென்பாகத்தானே தமயந்தியருந்ததியும்-அகலி
கை-சந்திரமதி அநுசூயா சுந்தரிவாசுகி மாதர்களைப்போல-தமது
மணவாளனோடிருந்து குணமுடன்வாழ்ந்து யிருக்கவேண்டும் களிப்
பாய்-மிகவும்-இஷ்டமாயிருக்கவேண்டும் கஷ்டம்நேர்ந்தாலும் மூன்
வினையால்நேர்ந்த-புருடன்-மூடனாயிருந்திட்டாலும் வோடிடாமலே
ஏவல்செய்யவேண்டும்-வெறுத்து - ஏற்றவனல்லவென்று மாற்றினால்
மனம் நரகமடையவேண்டும்-அந்த-நங்கையர்க்குமீளாத்துய ரங்க
ளேயுண்டு குலமகட்கேயழகு-தன்-கொழுனனுக்கேற்றவாறு ஒழு
க்கமுடனே இருந்தாலதேபெருமை-அவ்வா-றில்லாவிட்டால்பெருங்
கெட்டு பொல்லாப்பாவியாய் யாருஞ் சீசீயென - தூஷித்து - அடங்
காப்பிடாரியென்று கடிந்துரைப்பார் அதுபோலிருக்காமல்-அவரவ
வர்-ஆளன்மொழிகட்கடங்கி சீலமுடனே என்றுமிருந்தாற்புகழே-
லமிக்கும்-இப்படியிருந்திட்டால் நற்பதமாகும் பதிவிரதா தன்மை-
இதுவே-பகர்ந்தேனம்மா மனமகிழ்வுடனே நாராயணசாமிபாதம்-
பணிந்து-பூராவாய்துதித்திடுவேன் ஆராவமுதே காத்தருளும்தாயே
வந்தனம்-காத்தருளும் தாயே.

எமதர்மன் சத்தியவந்தனை உயிர்பெறச் செய்து
சாவித்ரியுடனே அவர்கள் சுயதேசத்திற் சென்று
அன்பாய்வாழ்ந்திருக்கச்செய்தார்.

சாவித்ரி—சம்பூர்ணம்.

[redacted]